திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 1] விளம்பி மாசி - 1959 மார்ச் [மணி 6

ஆலய அமைப்பு

சாதாரணமாக ஆலயங்கள் சரீரப் பிரஸ்தாரமாகவும், இருதயப்பிரஸ்தார மாகவும் அமைக்கப்பெற்றுள்ளன. ஊனுடம்பின் அமைப்பைப் போன்று சில கோயில்கள் கட்டப்பெற்றிருக்கக் காண்கிறோம்.

'எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்'
இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்'

ஆலயங்களிலேயுள்ள கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், அலங்கார மண்டபம், நிருத்த மண்டபம், பஞ்சப்பிரகாரங்கள், யாகசாலை, பாகசாலை, நந்தி, பலிபீடம், கொடிமரம், தீர்த்தம் முதலியவற்றை நோக்குங்கால், அவை அண்டத்தில் காணப்படும் பாகுபாடுகளையும், பிண்டத்தில் காணப்பெறும் பாகுபாடுகளையும் கொண்டனவாகக் காண்கிறோம்.

1. கர்ப்பக்கிரகம்-மூலாதாரம்.
2. அர்த்தமண்டபம் - சுவாதிட்டானம்
3. மகாமண்டபம்-மணிபூரகம்
4. ஸ்நபனமண்டபம் (அபிஷேக மண்டபம்)-அநாகதம்
5. அலங்கார மண்டபம்-விசுத்தி
6. நிருத்த மண்டபம் (சபா மண்டபம்)—ஆக்கினை என்னும் ஆறு ஆதாரங்களையும் குறிக்கும்.

ஆயிரக்கால் மண்டபத்தால் சிரசின் பின்புறமுள்ள ஆயிரமிதழ்களையுடைய மூளையும், அதன் அருகேயிருக்கும் தீர்த்தத்தால் அம்மூளையிலுள்ள சந்திர புஷ்கரணியும் குறிக்கப்படும்.

பஞ்சப் பிரகாரங்களாகிய ஐந்து ஆவரணங்களும் பஞ்சகோசங்களைக் குறிக்கும்.

1. முதல் ஆவரணம் - அன்னமய கோசம்.
2. இரண்டாம் ஆவரணம்-பிராணமய கோசம்.
3. மூன்றாம் ஆவரணம்-மனோமய கோசம்.
4. நான்காம் ஆவரணம்-விஞ்ஞானமய கோசம்.

5. ஐந்தாம் ஆவரணம்-ஆனந்தமய கோசம்.

சில கோயில்களில் மூன்று ஆவரணங் கள் இருக்கும். அவை தூல, சூக்கும, காரண சரீரங்களைக் குறிக்கும். சில ஆலயங்களில் உள்ள சப்தபிரகாரங்கள் சப்த தாதுக்களாகிய இரசம், இரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, மச்சை, சுக்கிலம் என்பவற்றைக் குறிக்கும். அநேக கோயில்களில் எல்லாவற்றையும் குறிக்க ஒரே ஆவரணம் மாத்திரம் இருக் கும். இவ்வமைப்பை விளக்கவே திரு மூலர் திருமந்திரத்தில்,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்று கூறியுள்ளார்.

ஆலயம்=ஆ+இலயம் = பசுக்களா கிய உயிர்கள் ஒடுங்குமிடம். அதுபோல உயிர்கள் தங்குமிடம், உடம்பு=உடை+ ஐ+பூ=பஞ்ச பூதங்களின் சேர்க்கை யால் உண்டான உடம்பு. 'ஐந்து வகை யாகின்ற பூதபேதத்தினுல் ஆகின்ற ஆக்கை' என்ருர் தாயுமான சுவாமிகள்.

திருக்கோயில்களின் முன்புள்ள வானளாவிய கோபுரங்கள் உடம்பி லுள்ள ஆதாரங்களைக் குறிக்கும். கோபுர வாயில் மூலாதாரத்தையும், மேல் உள்ள நிலைகள் மற்ற ஆதாரங்களையும் குறிக்கும். மூலத்தானத்திலுள்ள லிங்கம் அல்லது மூர்த்தி சூக்குமலிங்கத்தையும், மூலத் தானத்தின்மேல் உள்ள தூபியோடு கூடிய விமானம் தூல லிங்கத்தையும் குறிக்கும்.

கோபுரங்கள் 5,7,9 நிலைகளுள்ளவை களாகக் கட்டப்பட்டுள்ளன. ஐந்து நிலை களுள்ள கோபுரத்தின் வாயில் மூலா தாரத்தையும், ஐந்து நிலைகளும் சுவாதிட் டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாய தத்துவங்களைக் குறிக்கும். ஏழு, ஒன்பது முதலிய நிலைகளைக் கொண்ட கோபுரங்களில் ஐந்துக்கு மேற் பட்ட நிலைகள் நிராதார தத்துவங்களை யும் மீதானத்தையும் குறிக்கும்.

முப்பொருளுண்மை: நடமாடுங் கோயில் களான உடம்புகளில் உயிரைப் பசுவாக வும், உயிர்க்குயிராய் உயிரைக் காப்பவ ஞக உள்ள இறைவனைப் பதியாகவும், இறைவனை உயிர் அடையவொட்டாமல் தடுக்கும் ஆணவ முதலிய மும்மலங்க ளைப் பாசமாகவும் காண்கிருேம். 'ஊன் எங்குளது அங்குளன் உயிர்க்காவலன்' என்பது திருமந்திரம். படமாடுங் கோயில் களாகவுள்ள ஆலயங்களில் நந்தி, லிங்கம், பலிபீடம் இம்மூன்றும் பசு, பதி, பாசம் என்னும் முப்பொருள்களையும் குறிக்கும்.

'ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடல்ஏறு எனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகுநற் பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வார்கட்கே'

என்பது திருமந்திரம்.

ஆலயத்துட் செல்லும்போது முத லில் அமைக்கப்பெற்றுள்ள நந்திக்கு முன் புறம் பலிபீடம் அமைக்கப்பெற்றிருக் கும். உள்ளே லிங்கத்துக்கு அருகேயுள்ள நந்திக்குப் பின்புறம் பலிபீடம் அமைந் திருக்கும். இதுவே சரியான முறை. நமக் கும் இறைவனுக்கும் நடுவேயுள்ள பாசம் நீக்கப்பெற்று இறைவனை யடைதல் வேண்டும். இறைவனையணுகி அ[illegible] அருள் பெற்ருல் பாசம் நீங்கி பசுவ[illegible] இறைவனை யடையும் என்பதைத்தான் இவ்வாறு அமைத்துக் காட்டியுள்ளனர். இதனையே,

'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அனுதி
பதியினைச் சென்றணு காப் பசுபாசம்
பதியணுகில் பசுபாசம் நிலாவே'

என்றார் திருமூலர். 'வள்ளற் பெருமானுக்கு வாய் கோபுர வாசல்' என்ற திருமந்திரத்தின்படி, வாய்க்குள் இருக்கும் நாக்கு நந்தியைக் குறிக்கும். நாக்கின் உதவியில்லாமல் ஒரு பொருளும் உடம்பினுள் செல்ல முடியாது. அதுபோல நந்தியின் அருள்பெற்று ஆலயத்துட் சென்று வழிபாடு செய்ய வேண்டுமென்பது முறை. ஞானத்தால் அருள்பெற்ற ஆன்மாக்களின் முதல்வராக நந்தியை அமைத்துள்ளனர்.

கொடிமரம் உடம்பில் சுழு முனை நாடி செல்லும் வழியாகிய வீணைத் தண்டைக் குறிக்கும். வீணைத்தண்டு 33 எலும்பு வளையங்களைக் கொண்டது. கொடி மரத்திலும் சாதாரணமாக 33 தாம்பிரம் அல்லது பொன் வளையங்கள் இருக்கும். வீணைத்தண்டு மூலாதாரத்திலிருந்து பிரமரந்திரம்வரை இருப்பது போல கொடி மரமும் மூல லிங்கத்தின் மட்டத்திலிருந்து விமானத்தின் மேலுள்ள தூபியின் அளவு இருக்கும். குண்டலினி சக்தியானது சுழுமுனை நாடி வழியாக ஏறி பிரமரந்திரத்தை அணுகுவது போல கொடிமரத்தில் கொடி ஏற்றப்பட்டுத் திருவிழாக்கள் துவக்கப்பெறுகின்றன.

சராசரங்கள் அல்லது தாவர சங்கமப் பொருள்களில், ஆலயம் தாவரம் அல்லது அசரத்தையும், உடம்பு சங்கமம் அல்லது சரப்பொருளையும் குறிக்கும். இதையே,

'படமாடுங் கோயில் பரமர்க் கொன்றீயில்
நடமாடுங் கோயில் நம்பர்க் கங்காகா
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடுங் கோயில் பரமர்க் கங்காகும்'

என்றார் திருமூலர்.

பூகோள நூல் கற்பவருக்கு பூகோளப்படம் இன்றியமையாததுபோல் உயிர் உடம்பின் தத்துவங்களை அறிவதற்கு ஆலயங்கள் விளக்கப் படங்களாகக் காட்சியளிப்பதை மேலே கண்ட குறிப்புக்களால் உணரலாம்.

'தாபரத்துள் நின்று அருளவல்லான் சிவன்'

என்பதும்,

'மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை'

என்பதும்,

'உடம்புளே உத்தமன்
கோயில் கொண்டானென்று
உடம்பினை யான்
இருந்து ஓம்புகின்றேனே'

என்பதும்,

'ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளிதாமே'

என்பதும்,

'தன்னையறியத் தனக்கொரு கேடில்லை'

என்பதும் திருமூலர் திருவாக்குகள்.

"குறிக ளும்மடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியி லீர்மன மென்கொல் புகாததே"

என்பதும்,

"காயமே கோயிலாகக் கடிமனம்
அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக
மனமணி யிலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா
நிறைய நீ ரமைய ஆட்டிப்
பூசனை யீச னார்க்குப்
போற்றவிக் காட்டி னோமே"

என்பதும் அப்பர் பெருமானின் அருள் வாக்குகள்.

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழிஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"

என்பது சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம்.

'உடம்பினுலாய பயனுவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்'
'எவ்வுயிரும் பராபரன்தன் சந்நிதியாகும்
இலங்கும் உயிர்உட லனைத்தும் ஈசன்கோயில்'
'அன்னத்தாலாய பயனெல்லா
முன்னேனைக் காட்டிவிடும்'

என்னும் அருள் வாக்குகளையும் சிந்திக்க வேண்டும்.

"திருக்கோயி லுள்ளிருக்கும்
திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவனுறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தால்
என நினையும் அவர்க்கும்
உளனெங்கும் இலன் இங்கும்
உளனென் பார்க்கும்
விருப்பாய வடிவாகி
இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தின் வந்துதித்து
மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணுத
பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவதுபோல் வெளிப்பட்
டருளுவன் அன்பர்க்கே"

என்பது சிவஞான சித்தியார்.

விஷ்ணு ஆலயங்களிலும் கோபுரம், கொடி மரம், பலிபீடம், கருடாழ்வார், மண்டபங்கள், யாகசாலை, பாகசாலை, தீர்த்தம், மூர்த்திகள், விமானம், தூபி எல்லாம் உண்டு. சில விஷ்ணுகோயில்களில் கொடி மரத்துக்கு முன்பும், சில விஷ்ணு ஆலயங்களில் கொடிமரத்துக்குப் பின்புறமும் பலிபீடம் அமைந்திருக்கும். ஆனால் கருடாழ்வாருக்கும், மூலமூர்த்திக்கும் நடுவே பலிபீடம் இருக்காது. இதுவும் முப்பொருளுண்மையை (ஜகத்ஜீவ பரம்) உணர்த்துகிறது. பற்றுகிய பலிபீடத்தைத் தாண்டி உயிராகிற கருடாழ்வார் இறைவனை அணுகியிருப்பதிலிருந்து காணலாம். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பது நம்மாழ்வார் திருவாக்கு.

நமது சரீரமாகிய ஆலயத்தில் பிரம்ம கபாலமே மூலஸ்தானம் அல்லது கர்ப்பக்கிரகம். இப்பிரம்ம கபாலத்தின் கீழ் மிருதுவான ஜவ்வினுல் வளைவாய் மூடப்பட்ட மூளை யிருக்கிறது. பல நரம்புகளும் சுற்றி யமைந்து ஆயிர மிதழ்களை யுடைய கமலம்போல் அமைந்துள்ளது. இதற்கும் பிரம்மகபாலத்துக்கும் நடுவே இருள் மயமான வெளி யிருக்கிறது. இதுவே இறைவன் உறைவிடமான இருண்ட கர்ப்பக்கிரகம். இதை முன்னிட்டே கர்ப்பக் கிரகங்களெல்லாம் பலகணிகள், துவாரங்கள் எதுவுமில்லாமல் கட்டப் பெற்றிருக்கின்றன.

இறைவன் தன் அடியார்களுக்குப் பல்வேறு வகைகளில் காட்சி யளித்த அருட்கோலங்களெல்லாம் தத்துவப் பொருள்கள் நிறைந்து விளங்குகின்றன. அத்திருவுருவங்களைப்பற்றித் தனித் தனியேவரும் கட்டுரைகளில் காணலாம். திருக்கோயில்களில் அமைக்கப் பெறக் காரணம், அம்மூர்த்திகளின் தத்துவங்கள் முதலியன குறித்து ஒன்றிரண்டு கோயில்களை மாதிரிகளாகக் கொண்டு ஆராய்தல் நலம். அதன் பின்பு ஆலயங்கள் தொன்றுதொட்டு எவ்வாறு பயன்பட்டுள்ளன என்பதையும் ஆராய்தல் நலம்.

சைவம்

திரு K. வச்சிரவேலு முதலியார், B.A., L.T.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சைவ சாத்திரங்கள்

சைவ சமயத்தில் கொள்ளப்படும் அடிப்படை உண்மைகளையும் கொள்கைகளையும் முறைப்படுத்தி உணர்த்தும் நூல்கள் சைவ சாத்திரங்கள் எனப்படும்.

சைவ சாத்திரங்களுள் **ஆதித்தமிழ் முதனூலாக** நிலவுவது பத்தாந் திருமுறை என வகுக்கப்பட்ட திருமந்திர மாலையே ஆகும். ஆயினும், பிற்காலத்து வேறு வேறு கொள்கைகளும் முடிபுகளும் பற்பல சமயத்தவர்களால், தமிழகத்தே பிரசாரம் செய்யப் பட்டமையின், அவற்றால் மக்கள் மயங்கா திருத்தற் பொருட்டுச் சிவானுபூதிச் செல்வர் தம் தம் காலநிலைக்கு ஏற்றபடி அருளிச் செய்த நூல்கள் பதினான்கு உளவாயின. அவை (1) திருவுந்தியார், (2) திருக்களிற்றுப் படியார், (3) சிவஞானபோதம், (4) சிவஞான சித்தியார், (5) இருபாவிருபஃது, (6) உண்மை விளக்கம், (7) சிவப்பிரகாசம், (8) திருவருட் பயன், (9) வினா வெண்பா, (10) போற்றிப் பஃறொடை, (11) உண்மை நெறிவிளக்கம், (12) கொடிக்கவி, (13) நெஞ்சு விடுதூது, (14) சங்கற்ப நிராகரணம் என்பவை ஆகும். இவற்றை அச்சிவானுபூதிச் செல்வர் முன்னர்த் தம்மாணாக்கர்களுக்கு உணர்த்திப் பின்னர் அவ்வாறே வழி வழியாக ஞான பரம்பரையில் உபதேச நூல்களாக நிலைபெறும் படி வைத்தார்கள். இப்பதினான்கு நூல்களும் **மெய்கண்ட நூல்கள்** எனவும், **சைவ சித்தாந்த சாத்திரங்கள்** எனவும் வழங்கி வருகின்றன.

இப்பதினான்கு நூல்களும் 12-ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. சிவ நெறியில் உணர்த்தப்படும் மெய்யுணர்வு நெறியை மரபு அளவில் விளக்குவன; பிற சமய நோக்குப் பற்றி எழும் தருக்க வாதங்களும் வினாவிடைகளும் இவற்றில் இல்லை.

சிவஞான போதம் முதலிய பிற பன்னிரண்டு நூல்களும் 13, 14-ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. பெரும்பான்மை பற்றிக் கூறின், இவை சுபக்கம் (தன் கொள்கை) கூறும் போதும் பரபக்க நோக்கு (பிற கொள்கைகளை மறுக்கும் கருத்து) உடையவையாகவே இயற்றப்பெற்றவை. அதாவது, இவை சைவத்துட் கொள்ளப்படும் ஒழுக்க நெறி, அறிவு நெறி, அன்புநெறி என்பவற்றை முறைப்படுத்தி விளக்கும்போது, அவற்றைப் பற்றிப் பிறர் கூறும் பொருந்தாக் கொள்கைகளைக் குறிப்பித்து மறுப்பனவாக அமைந்துள்ளன.

இனி, இச்சாத்திரங்களின் அமைப்புப் பற்றியும் பொருணிலை பற்றியும் சுருக்கமாகச் சில தெரிந்து கொள்வோமாக.

(1) **திருவுந்தியார்:** இந்நூல் 45 கலித்தாழிசைகளால் ஆயது. இதனை அருளிச் செய்தவர் திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார். அவர் இதனைக் கி. பி. 1147-ல் அருளிச் செய்தார் என்ப.

இதன்கண் கூறப்படும் பொருள்:-மன மொழிகளுக்கு அப்பாற்பட்ட முதல்வனே ஞானாசிரியனாய் வெளிப்பட்டு மெய்யுணர்வை நல்குவன். அது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் நான்கு திறத்தால் உணரப்படும். அவ்வாறு உணர்ந்தார் சிவமே ஆவர். சிவமாந்தன்மைப் பெருவாழ்வு முதல்வன் அருள வருவது என்று உணர்தல் வேண்டும். கேட்டல் ஞானம் அனுபவ ஞானமாய் முதிர்வதற்கு ஆதாரயோகம், நிராதார யோகம் என்னும் இருவகை யோகப் பயிற்சி

யும் வேண்டத்தக்கவை. மெய்யுணர்வின் பயனாக, யான் எனது என்னும் செருக்கு நீங்கும்படி கரைகடந்து எழும் பேரன்பு ஒன்றால்தான் சிவமாந்தன்மையை முதல்வன் வழங்கப்பெற்று, இன்புறு நிலையை எய்துதல் கூடும். இந் நூல் உலகத்தார் அனைவர்க்கும் மலக்ஷயம் (பாச நீக்கம்) செய்யவல்லது. இத் தகைய பல அரிய பேருண்மைகள் இனிய, எளிய பழகு தமிழில் இந்நூலுட் கூறப்படு கின்றன.

இந்நூலின்கண் உள்ள பின்வரும் கலித்தாழிசைகள் இதன் பொருள் விழுப்பம் உணர்வதற்குத் துணை செய்யும்: —

அகளமா யாரும் அறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற ;
தானாகத் தந்ததென் றுந்தீபற. 1
உள்ளம் உருகில் உடனாவர் அல்லது
தெள்ள அரியரென் றுந்தீபற ;
சிற்பரச் செல்வரென் றுந்தீபற 7
அவனிவன் ஆன(து) அவனருளால் (அல்லது)
இவனவன் ஆகானென் றுந்தீபற;
என்றும் இவனேயென் றுந்தீபற. 40
வைய முழுதும் மலக்கயங் கண்டிடும்
உய்யவந் தான்உரை உந்தீபற ;
உண்மை யுணர்ந்தாரென் றுந்தீபற. 45

(2) திருக்களிற்றுப்படியார் : இது திருவுந்தியாரின் வழி நூலாகும்; அதன் உட்கருத்தைச் சிறிது விரித்து விளக்குவது ; இது நூறு திருவெண்பாக்களாலாயது.

திருவுந்தியார் அருளிச் செய்த உய்ய வந்த தேவநாயனாருடைய மாணாக்கர் ஆளுடைய தேவநாயனார் ; அவர் மாணாக்கர் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார். இவரே இந்நூலை கி.பி. 1177-ல் அருளிச் செய்தவர்.

இந்நாயனார், இந்நூலை ஆக்கிய பின் தில்லையம்பலஞ் சென்று கூத்தப் பெருமானை வணங்கி நின்று, இதனை அப்பெருமான் திருமுன்பு திருக்களிற்றுப்படியின் மேல் வைத்தார். அப்போது கூத்தப்பெருமான் திருவருளால் கல்லால் இயன்ற திருக்களிற்றுக்கை நிமிர்ந்து இந்நூலை வாங்கிப் பெருமானது எடுத்த பொற் பாதத்தில் இட்டது. இக் காரணத்தால் இது திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் பெறுவதாயிற்று.

இந்நூல் "உபநிடதம், பிரம சூத்திரம், பகவத்கீதை" என்னும் மூன்றுமே முதன்மையான பிரமாண நூல்கள் எனக் கூறி, அக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, மாறுபட்ட வேறு வேறு கொள்கைகளை மக்களிடைப் பரப்பிய மதாசாரியர் பிரசாரங்கள் தமிழ் நன்மக்களிடையே செல்வாக்குப் பெறாத காலத்தில் இயற்றப்பட்டது என்பது இதனை உற்று நோக்குவோர்க்கு விளங்கக் கூடிய உண்மை. இதன்கண் விளங்கப்படும் சிவானுபவப் பயன்களுக்குத் திருக்குறள், திருமுறை என்னும் தமிழ் மறை மேற்கோள்கள் காட்டப்படுகின்றன ; உண்மை நாயன்மார் அனுபவங்களும் எடுத்துக் காட்டப்படுகின்றன. இறைவன் அடிகூடுதற்குரிய சாதனங்களைச் சிவதன்மம், சிவயோகம், சிவஞானம் என மூன்றாக வகைப்படுத்தி இந்நூல் கூறுகின்றது ; இவ்வாறு கூறுதல் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்துள்ள சிவபுரத் திருப்பதிகத்துக் கூறப்படுவதோடு ஒத்திருத்தல் கருதத்தக்கது. உண்மை நாயன்மார் செயல்களை உள்ளவாறு உணர வேண்டின், அவற்றை மெல்வினை (விதி மார்க்கத்தின் பாற்படுபவை), வல்வினை (பக்தி மார்க்கத்தின் பாற்படுபவை) எனப் பிரித்து வைத்து உணர வேண்டும் என்னும் விளக்கம் இந்நூலாற் பெறப்படுகின்றது.

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்
என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம்—சார்பு
கெடவொழுகின் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று. ௩௪

வேண்டுங்கால் வேண்டும்
பிறவாமை என்றமையால்
வேண்டினஃ தொன்றுமே
வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரு
மென்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டுமவன் பால். ௪௦

என்பவை இந்நூலாசிரியர் திருக்குறளைப்

பொதுமறையாகக் கொண்டமையைக் காட்டும்.

முதல்வனுக்கும் உயிர்க்கும் உள்ள பிரிப்பில் சம்பந்தத்தை மகாவாக்கியப் பொருள் உணர்த்து முகத்தால் இந்நூல் அ௩,அ௬-ஆம் திருவெண்பாக்களால் விளக்குகின்றது. இச் சம்பந்தமே உபநிடதங்களில் அத்வைதம் என்ற சொல்லால் உணர்த்தப்படும். இதனை இந் நூல் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்துள்ள "ஈருய் முதலொன்ருய்" எனத் தொடங்கும் திருவிழி மிழலைத் திருப் பதிகங்காட்டி விளக்குதல் தேவாரம் முதலிய அருணூல்களின் உயர்வைச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவுள்ள மக்கள் உணர்ந்து உய்தி பெறுவதற்குக் கருவியாக உள்ளது.

இன்னும் இதன் கண்

"நங்கையினல் நாமனைத்தும்
செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினற் செய்தளிக்கும்
நாயகனும்" ௭அ

அன்பேயென் அன்பேயென் றன்பால் அழுதரற்றி
அன்பே அன்பாக அறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்வ
தெல்லாம்
சாற்றும் பழமன்றே தான்— ௫௫

கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடலளக்க வாராதாற் போலப் படியில்
அருத்தி செய்த அன்பரை வந்தாண்டதுவும்
எல்லாம்
கருத்துக்குச் சேயனுய்க் காண். ௬௦

என்ருற்போல வரும் பாட்டுக்களெல்லாம் மிகவுயர்ந்த முடி நிலை உண்மைகளை எளிதிற் பெறவைப்பவை.

உற்று நோக்கின், இந்நூல் எழுந்த காலத்து உண்மையனுபவம் ஒன்றே நன்மக்களால் பாராட்டி மேற்கொள்ளப்பட்ட தென்பதும், வீண் தருக்கவாதங்களிலும், வடமொழி ஆரவாரங்களிலும் மக்கள் மனம் செலுத்தவில்லை என்பதும் தெள்ளிதிற் புலனும்.

சிவஞான பேர்தம் முதலாகவுள்ள பன்னிரு நூல்களும் எழுதற்கும் காரணமாயிருந்த சூழ்நிலை இதற்கு முற்றிலும் மாருனது. அது பின்னர் விளக்கப்படும்.

(3) சிவஞானபோதம் என்னும் ஞான நூலே முன்னும் பின்னும் எழுந்த எல்லா நூல்களுக்கும் தலையாய நூலாக அமைந்தது. இதனை அருளிச் செய்தவர் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவ நாயனர் ஆவர். இவர்காலம் 13-ஆம் நூற்ருண்டின் முற் பகுதி ஆகும்.

இந்நூல் 12 சூத்திரங்களால் ஆயது; கடவுள் வாழ்த்து, அவையடக்கம் என்னும் இரண்டு செய்யுட்களை நூலின் அகத்துறுப் பாகிய பாயிரமாக உடையது. அளவிற் சிறி தாயினும் அறிவு நூல்களின் முடிபெல்லாம் அகப்படுத்துத் தெரிவிப்பது. சித்தாந்த சைவத்தின் அடிப்படை உண்மைகளையும் முடிநிலை முடிபையும் 39 தெரிவுகளில் (Propositions) முறைப்பட அடங்கக் கொண்டு தெளிய உணர்த்துவது. வேதாகமங்களின் முடிந்த முடிபை இந்நூல் ஒன்ருலே ஒருவர் உணர்தல் கூடும். இஃது உண்மை நூல்களின் பொருணிலை, மெய்யுணர்வு, அதனைப் பெறும்வழி, அதன் பயன் என்பவற்றை அளவை முறையின் வைத்துக் கோவைப் படுத்தி விளக்குவது. உண்மையின் இணைப்பு நிலையை (Synthesis of truth) ஒருவன் இந் நூல் சார்பாகத் தலை நின்று உணர்ந்து இன் புறு நிலையைப் பெறலாம்.

இந்நூலின் பொருணிலை பின்வருமாறு உள்ளது:—

(அ) காப்புச் செய்யுள்:

பல நூல்களைக் கற்பதனல் வரும் குழப்ப உணர்வு நீங்கித் தெளிவுணர்வு பெறுவதற்குக் கல்லால நிழலில் எழுந்தருளியிருந்து அருள்புரியும் சிவபிரான் திருவருள் வேண்டும். விநாயகப் பெருமானை வழிபடுவார்க்கு அத்திருவருள் எளிதிற் கைகூடும்.

(ஆ) அவை யடக்கம்:

முதற் பொருளைத் தலைப்பட்டு உணரும் உணர்வே மெய்யுணர்வு எனப்படும். அவ்வுணர்வு முதற்கண் உயிரின் இயல்பைத் தெளிய உணர்ந்தார்க்கே வரக்கூடியது. உயிராகிய தம் இயல்பை முன் உணர்ந்து பின்

தலைவனை உணர்ந்தோர் சிவனோடு ஒப்பர். அத்தகைய உண்மையனுபவம் பெற்றவர் எம் மாற் செய்யப்படும் இச்சிவஞானபோத நூலைப் பொருட்படுத்தாது இரார்; நல்லது எனக் கைக்கொள்வர்.

இனி, தம்மியல்பையே உணர மாட்டாத பிறர் எல்லோரும் தலைவன் இயல்பை எங்ஙனம் உணர்வர்? அவரெல்லாரும் உண்மையின் ஒவ்வொரு கூறுபற்றிய ஏகதேச உணர்வைக்கொண்டு ஒருவரோடு ஒருவர் முரண்பட்டுப் பலவற்றைக் கூறு நிற்பர். அன்னோர் எம்மையோ, எம்நூலையோ பொருட்படுத்தாது இகழ்ந்து கூறின், யாம் அவர் கூற்றுக்களைப் பொருட்படுத்தோம்.

(இ) நூல்

முதற் சூத்திரம் : உலகம் அவன், அவள், அது எனச் சுட்டி உணரப்படுவது; தோன்றி நின்று மறைந்து, மீளத் தோன்றுவதாய் உள்ளது. ஆதலால், இவ்வுலகை நியமித்து ஒழுங்குபட நடாத்திவரும் முதல்வன் ஒருவன் இருத்தல் வேண்டும். அம்முதல்வன் சுட்டியுணரப்படாதவனாய், எவ்வகையான மாறுதலும் இல்லாத செம்பொருளாய், எல்லா உலகையும் ஒருங்கே ஒடுக்கி, ஒருங்கே தோற்ற வல்லவனாய் இருத்தல்வேண்டும். உயிர்கள் அறியாமையாகிய தம் இயற்கைக் குற்றம் நீங்கி மெய்யுணர்வைப் படி முறையில் பெற்று மேம்படுதற் பொருட்டே அம்முதல்வன் உலகப் படைப்பை மேற்கொள்ளுகின்றான். இக் காரணங்களால், முதல்வனை உலகின் பரம ஆதார நிமித்த காரணன் என்று உணர்தல் வேண்டும்.

இரண்டாம் சூத்திரம் : முதல்வன் இவ்வுலகிற்கு வேறாக ஓர் உலகத்திலிருந்து கொண்டு இதனை நடத்துகின்றான் என எண்ணுதல் கூடாது. காந்தத்தின்முன் புடைபெயரும் இரும்பு அக்காந்தத்தின் இழுப்பாற்றற் சூழலில் (Magnetic field) அகப்பட்டு நிற்றல்போல, உலகுயிர் அனைத்தும் முதல்வனுடைய அருளாற்றற் சூழலின் அகப்பட்டு, அவன்றன் வியாபகத்தில் அடங்கி நிற்பவை ஆகும். ஆதலால், இந்நிலையில், முதல்வன் உயிர்களோடு கலந்து ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று, அவை தாம் முற்செய் வினைக்கு ஏற்பத் தொழிற்பட்டு நடக்குமாறு, அவற்றைத் தனது ஐந்தொழிலிற் படுத்தி, நடத்துவன். அவன் தானும் தன் சக்தியும் எனத் தன்னுள் இருவேறு வகைப்பட நின்று உலகினை நடத்துவன்.

ஞாயிறு தன்னைச் சுற்றும் கோள்களைத் தன் ஈர்ப்பு ஆற்றற் சூழலிலும் பேரொளியிலும் அடங்கக்கொண்டு, அவற்றைத் தொழிற்படுத்துமாறு போல, இறைவன் உலகுயிர்களைத் தன் அருளாட்சியின் அகப்படுத்தி ஐந்தொழிற் படுத்துவன்.

ஞாயிறுபோல முதல்வன் உளன்; அந்நிலையில் முதல்வனை அப்பன், சிவன் எனக் கூறுகின்றோம். ஞாயிற்றின் ஒளியையும் ஈர்ப்பு ஆற்றலையும் போல, அவன்றன் பேராற்றல் உள்ளது. அதனை அம்மை, சக்தி திருவருள் எனக் கூறி வருகின்றோம்.

இவ்வாறு முன் இரண்டு சூத்திரங்கள் கடவுள் இயல்பை அண்டத்தின் வைத்து (காணப்படும் பேருலகைக் காட்டி) உணர்த்துகின்றன. இனி, அடுத்துவரும் சூத்திரங்கள் உயிரின் இயல்பைப் பிண்டம் எனப்படும் நம் உடம்பில் நிகழும் நிகழ்ச்சிபற்றி உணர்த்துகின்றன.

(தொடரும்)

கண்ணன் அவதாரமும் திருவுருவமும்

பி. ஸ்ரீ.

கோன் இல்லாத மந்தைபன்று இவ்வுலகம் எனத் தெளிந்தார். 'உளன் கண்டாய் நன்னெஞ்சே! உத்தமன்' என்று துணிந்தார். அந்த உத்தமனைப் 'பேராயனை' என்றார். அறிதுயில் அமர்ந்தவண்ணம் அகில உலகமும் காவல் செய்யும் பேராயனை 'அரவணைமேல் பேராயன்' என்று புராண பாஷையில் வருணித்தார். அந்தப் பெரிய கோனார் பாற்கடலைவிட்டு ஆயர்குலத்தில் அவதரித்ததையும் பாடினார். இப்படிக் கடவுளுண்மையையும், கண்ணன் பிறந்து லீலைகள் புரிந்ததையும் முதலாழ்வார் மூவருள் முதல்வரான பொய்கையார் வாக்கிலே காண்கிறோம்.

பெரியகோனாரின் லீலை அல்லது திருவிளையாட்டே ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத்தொழிலாக நடைபெறுகிறது. அவர் கண்ணனாகப் பிறந்து புரிந்த திருவிளையாடல்களையும் பக்திக்கண்ணால் பார்த்து அனுபவிக்க வேண்டும். இது வைணவ பக்தர்களின் கொள்கை.

மகாபாரதத்திலே கண்ணனை இராஜதந்திரியாகவும், அறப்பற்றுள்ள ஐவர் நண்பனாகவும், அவர்கள் தூதனாகவும் காண்கிறோம். போர்க்களத்தில் தேரோட்டும் பார்த்தசாரதியாகவும் கண்ணனைக் காட்டுகிறது பாரதப் பேரிதிகாசம். பார்த்தசாரதி தத்துவக் கொள்கைகளின் கருவூலமாகிய பகவத்கீதையை அருளிய பரமாசாரியனாகத் திகழ்வதையும் காண்கிறோம். கீதாசாரியன் உலகப் பேரறிஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறான்; அண்மையில் வாழ்ந்த உருதுமுஸ்லீம்கவியான **இக்பால்** போன்றவர்களின் கலைச்செவ்வி நிறைந்த இதயங்களையும் வசிகரித்திருப்பதைக் காண்கிறோம். எனினும், பாரதக் கண்ணபிரானைக் காட்டிலும் கீதை அருளிய மேதையைக் காட்டிலும் அதிக அளவில் குழந்தையும் இளங்குமரனுமாகிய கண்ணனது திருவிளையாடல்களே இந்தியாவின் பக்தியுள்ளத்தையும் கவியுள்ளத்தையும் சிறப்பாக வசிகரித்திருக்கின்றன.

கடவுளைக் கவி ரவீந்திரநாதர் 'மேகக் குழுவினிடையே மின்னி மறைகிற ஒளி-நிழல் கூட்டங்களில் ஒரு புதுமைக் குழந்தையாகச் சிரித்துக்கொண்டிருக்கிறார்' என்று கற்பனை செய்திருக்கிறார். யோகி அரவிந்தரோ, 'நித்தியமான தோட்டத்தில் (பிருந்தாவனத்தில்) நித்தியமாக விளையாடல் புரியும் நித்தியமான குழந்தை' கடவுள் என்கிறார். இக் கருத்துக்களுடன், கண்ணனைத் 'தீராத விளையாட்டுப் பிள்ளை'யாகப் பாடும் நமது புதுமைக் கவி பாரதியாரின் கற்பனையையும் ஒப்பிட்டுப் நோக்கினால், கண்ணனுடைய பாரதக் கதைகளைக் காட்டிலும் பாகவதத்திலே பிரஸ்தாபிக்கப்படும் கிருஷ்ணலீலைகள் அதிக அளவில் பக்தர்களும் கவிகளும் யோகிகளுமான ஆழ்வார்களை வசிகரித்திருப்பதற்கு உரிய காரணம் ஒருவாறு புலனாகக் கூடும்.

பாகவத புராண காலத்திற்கு முன்பே கண்ணன் கதைகள் வட இந்தியாவைப் போல் தென்னிந்தியாவையும் வசிகரித்திருந்தன என்றும், தென்னகத்திலும் தமிழகத்தைச் சங்க காலம் தொட்டே கண்ணன் கதைகள் வசிகரித்தவண்ணமாயிருந்திருக்கின்றன என்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆழ்வார்கள் காலத்திற்கு முன்பே தமிழ்ப் பொது மக்களிடையே கிருஷ்ணபக்தி வேரூன்றி வளர்ந்திருந்தது.

பண்டைத் தமிழர்கள் நிலத்தை மலை, காடு, நாடு, கடற்கரை யென்று நானிலங்களாகப் பிரித்துக் காடும் காடு சார்ந்த நிலமுமான முல்லைக்கு அதிதெய்வம் திருமால் என்று சிறப்பித்துப் பேசினார்கள்.

அங்கண் முல்லையின்
தெய்வம்என்(று) அருந்தமிழ்
உரைக்கும் செங்கண்மால்

என்பது சிவநேசச் செல்வரான சேக்கிழாரின் திருவாக்கு. இச்செங்கண்மாலை 'மாயோன்' என்பர் தொல்காப்பியர். 'மாயோன்' என்றாலும் 'கண்ணன்' என்றாலும், 'கருநிறம் உடையோன்' என்று பொருள். இம்மாயோனை நம்மாழ்வார் 'வளரொளி மாயோன்' என்றும், 'ஆதியம்பகவன்' என்றும் குறிப்பிடுகிறார். 'ஆதிபகவன்' என்று திருவள்ளுவர் கடவுளை முதற்குறளில் குறிப்பிடுவதும், 'பகவர்' என்று கிருஷ்ணபக்தர்களான பாகவதர்கள் குறிக்கப்படுவதும் கவனிக்கத்தக்கன.

'கடல்வண்ணன் கண்ணன்; கடற்கரையிலே உள்ள வெண்மணல் போன்றவன் அவனது அண்ணனான பலராமன்' என்று இரு தெய்வச் சகோதரரையும் சேர்த்து வருணிக்கிறது ஒரு பழஞ்செய்யுள். திருமாலிருஞ்சோலை மலையில் இவ்விரு தெய்வங்களும் கோயில்கொண்டிருப்பதாகப் பரிபாடல் தெரிவிக்கிறது. கண்ணன் கதைகளில் நம் தமிழகத்திற்கே உரிய சில வரலாறுகளும் வேற்றுமைகளும் உண்டு; பண்டைத் தமிழ்மக்கள் கண்ணபிரானது குழந்தைச் செயல்களில் ஈடுபட்டதற்கும் தொல்காப்பியத்தில் குறிப்பு உண்டு. சிலப்பதிகாரத்திலும் கண்ணபிரானது குழந்தைப் பருவமும் திருவிளையாடல்களும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

கண்ணன் பிறந்தான் (அவதார ரகசியம்)

கண்ணனது திரு அவதாரத்தைத் திருமாலின் முழு அவதாரம் என்று குறிப்பிடுவதுண்டு. கிருஷ்ணபக்தியே விஷ்ணு பக்தியாகி வைஷ்ணவமாயிற்று என்பது தற்கால ஆராய்ச்சியாளர்களின் கருத்து. நம் தமிழகத்து ஸ்ரீவைஷ்ணவம் என்ற பக்தி மதத்திற்கு 'மூலபுருஷர்' என்றும் 'குலபதி' என்றும், 'பரமாசாரியன்' என்றும் மதிக்கப் பெறும் நம்மாழ்வார் தமது கவியுள்ளத்திலே கிருஷ்ணாவதாரத்தைக் கண்டு காட்டுகிற ஓர் அற்புதக் காட்சியை இவர் அருளிச் செய்த 'திருவிருத்த'த்தில் காண்கிறோம்.

'தாமரைக் கண்ணன் உலகு' என்று திருவள்ளுவர் வருணித்திருக்கும் பரமபதத்திலே விண்ணோர் இறைவனை நன்னீராட்டித் தூய நன்மாலைகள் சூட்டுவதற்காக ஏந்தி நின்று தூபம் காட்டுகிறார்களாம். அப்போதே ஒரு மாயையால் இறைவன் கண்ணனாகப் பிறந்து வெண்ணெய் கவர்வதும் உள்ளம் கவர்வதுமாகிய திருவிளையாடல்களை முடித்துக்கொள்கிறானாம். அழகிய தூபம் என்ற அந்த நறும்புகையில் இறையுருவம் சற்று மறைந்து மறுபடியும் புலனாவதற்குள்ளே கிருஷ்ணாவதாரம் நிகழ்ந்து முடிந்து விடுகிறதாம்.

திருமாலின் அவதாரங்களைக் குறித்துப் பழைய முனிவர்கள் கூறியிருப்பது வாழ்க்கையின் பரிணாமம் குறித்த புதிய விஞ்ஞானக் கொள்கையுடன் நன்றாகப் பொருந்தியிருக்கிறது என்பது உயர்திரு ஜே. பி. எஸ். ஹால்டேன் என்ற விஞ்ஞானியின் தேர்ந்த கருத்து. டார்வின், ஹக்ஸ்லி முதலான புதுமைப் பேரறிஞர்களின் பரிணாமவாதவித்து நமது அவதாரக் கொள்கையில் காணப்படுகிறது என்றால், அதிசயமான ஒரு தத்துவப் பெருங் கருத்தின் வேரையும் இக்கொள்கையில் கண்டு கொள்ளலாம்.

விக்டர் ஹ்யூகோ தமது இதிகாச நவீனமாகிய 'லேமிஸராபிள்' என்ற நூலில் தெய்வ சக்தி கொடுங்கோலர்களின் அசுர சக்தியையும் செருக்கையும் வீழ்த்துவதற்காக இறங்கி வருவதைப் பிரஸ்தாபிக்கிறார். நெப்போலியனின் வீழ்ச்சிக்குக் கடவுளின் சங்கற்பமே காரணம் என்கிறார். நெப்போலியன் தனது பேராசையாலும் சர்வாதிகாரக் கொடுஞ் செயல்களாலும் கொலைகளாலும் கடவுளுக்குத் தொந்தரவு கொடுத்தான் என்கிறார். (கர்மவிரோதமான ராட்சஸ சக்தி திருமாலின் அறிதுயிலைக் கலைக்கிறது என்பது புராணம்.) அதர்ம சக்தி சிந்தும் இரத்தமும் தாய்மார் சிந்தும் கண்ணீரும் தெய்வத்திற்கு முன் வாதாடுகின்றனவாம். தீமை பெரும் பாரமாகி விடுவதால் பூமி நொந்து புலம்புகிறதாம். அந்தப் புலம்பல் அருள் வெளியில் கேட்கிறது என்றும் வருணிக்கிறார் விக்டர் ஹ்யூகோ ("அழுது முறையிட்டால் அம்பலத்தே கேட்கும்" என்ற வாக்கு ஒப்பு நோக்கத் தக்கது.)

இத்தகைய தத்துவப் பெருங்கருத்தை நம்மவர்களும் புராணபாஷையில் வருணித்

திருக்கிறார்கள். பூமிதேவிக்குத் தன் குழந்தைகளைச் சுமப்பதிலும் ஊட்டி வளர்ப்பதிலும் சிரமம் இல்லை. நல்லவர்களைத் தாங்குவது இலவம்பஞ்சைத் தாங்குவதுபோல் இருக்கிறதாம். கொலை வழியில் ஈடுபடும் துஷ்ட அசுரர்களைச் சுமப்பதோ இரும்பு மூட்டையைச் சுமப்பதுபோல் இருக்கிறதாம். இந்தச் சுமை தாங்க முடியாமல் நிலமகள் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலிடம் முறையிட்டுக் கொண்டாளாம் ஒரு சமயம். அப்போது பகவான் பூபாரம் தீர்த்துத் தருமத்தை நிலை நிறுத்துவதாகத் தீர்மானித்து, 'வசுதேவருக்கும் தேவகிக்கும் பிள்ளையாகப் பிறக்கப்போகிறேம்' என்று சொல்லி நிலமகளைத் தேற்றினராம்.

ஆவணி மாதம் கிருஷ்ணபட்சத்து அஷ்டமி கூடிய ரோகிணி நட்சத்திரத்தில் விருஷப லக்கினத்தில் நட்டநடுநிசியில் கிருஷ்ணவதாரம் நிகழ்ந்தது. இந்த நிகழ்ச்சியைக் 'கிருஷ்ண ஜயந்தி' என்ற 'ஸ்ரீஜயந்தி'யாக ஆகஸ்ட்—ஸெப்டெம்பரில் இந்து மக்கள் கொண்டாடுகிறார்கள்.

பிறப்பு இல்லாத பரம்பொருள் இறங்கி வந்து பிறவியெடுக்கிறது கம்ஸன் சிசுபாலன் முதலான துஷ்ட அசுரர்களை அழிப்பதற்கும், பாரதப் போரில் நூற்றுவரை அழிப்பதற்கும் என்பது அவதார தத்துவத்தின் ஒரு வெளிப்படையான கருத்து. புருஷோத்தமனுன பேராயனது காதலுக்கும் கருணைக்கும் எல்லையே கிடையாது ; எனவே உலகத்திற்குக் கருணை புரிய உலகத்தைக் காதல் வலையில் பிடித்துக் கொள்ள, அவன் நம்மைப்போல ஓர் உடலில் தன்னைச் சிறைப்படுத்திக் கொள்கிறான் என்பது அவதார தத்துவத்தின் ஒரு நுட்பமான பொருள்.

பகைவனுக்கும் அருள்கிறது கண்ணனுன் அன்பு, பகைமையென்ற போர்வையைப் பிய்த்தெறிந்து அதற்குள்ளும் அன்பைக் கண்டு அருள்புரிகிறது என்பர். சாதுக்களைக் காக்கும் அறக்கருணையே மறக்கருணையாகித் துஷ்டர்களைத் தண்டிக்கிறதாம்.

பரம்பொருளை மெய்ப்பொருள் என்றும் வேதம் குறிப்பிடுகிறது. உண்மையே கடவுள் என்று காந்தியடிகளும் குறிப்பிட்டாரல்லவா? 'மேலொரு பொருளும் இல்லா மெய்ப் பொருள்......கால்தரைதோய நின்று' அவதரித்ததைக் கம்பன் வருணிக்கிறான். உண்மை அழகாக வந்து மரணத்தருவாயில் வாலியையும் மதம் அழிந்த நிலையில் வசிகரித்து ஆட்கொண்டது என்பது கவிச்சக்கரவர்த்தியின் கருத்து. சத்தியம் சௌந்தரியமாக அவதரித்து ஆட்கொள்வதைக் கிருஷ்ணவதாரத்திலும் காணகிறேம்.

அறம் செய்த அறத்தாலும், தீவினை செய்த தீவினையாலும் அவதாரம் நிகழ்கிறது என்றும் கம்பன் கூறியுள்ளான்.

விரிந்திடுதீ வினைசெய்த
வெவ்வியதீ வினையாலும்

என்று கவிச்சக்கரவர்த்தி கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது. தீவினை விரிந்துகொண்டே போனாலும், அது நிலையில்லாத் தீவினை தான். தீவினையை நிலை நிறுத்துவது எந்த ராட்சஸ சக்திக்கும் இயலாத காரியம். தீவினை விரிந்து படர்ந்து தருமத்தை அழித்துவிட முடியாது; விரிந்து விரிந்து தன்னை அழித்துக்கொள்ளத்தான் முடியும்! தருமம் என்ற வயலுக்குக் காவலாளி பட்டிமாடு மேய இடங்கொடுப்பானு? இந்த உண்மையைக் கமபராமாயணத்தில் விபீஷணன், 'அறத்தை முற்றும் காவற்குப்புகுந்து நின்றார் காகுத்த வேடம் காட்டி' என்ற தன் வாக்கில் நினைவூட்டுகிறான்.

நீதிமயமான நெடுந் தருமநெறியில் மக்கள் செல்லவேண்டும் என்பதே இறைவனது இயற்கைத் திட்டம். இதற்கு இடையூறு விளைக்கும் தீய சக்திகள் நாசம் அடைகின்றன; தூய சக்திகளோ இடர் நீங்கி முன்னேறுகின்றன. இந்தச் சூட்சுமமான உலகப் பரிணும விதிக்குத் துணை செய்வது அவதாரம். இந்தப் பெருங்கொள்கையை அனுமன் வாயிலாகச் சுந்தரகாண்டத்தில் வெளியிடுகிறது கம்பன் மேதை :

அறம்தலை நிறுத்தி, வேதம்
அருள்சுரந்(து) அறைந்த நீதித்
திறம்தெரிந்(து) உலகம் பூணச்
செந்நெறி செலுத்தி, தீயோர்

இறந்(து)க நூறி, தக்கோர்
இடர்துடைத்(து) ஏக, ஈண்டுப்
பிறந்தனன், தன்பொற் பாதம்
ஏத்துவார் பிறப்(பு) அறுப்பான்.

இந்த அவதாரக் கொள்கை ஸ்ரீகிருஷ்ணுவதாரத்திற்கும் பொருந்துவதுதான. அவதாரமூர்த்தியை, 'யார்க்கும் துடர் துடைத்தான்' என்று கூறும் கமபன் கொல்லப்பட்ட தீயோரை உள்ளிட்ட அனைவருக்கும்' துயர் துடைத்ததனிப்பெருங் கருணையை உய்த்துணர வைக்கிறுன். இந்தப் பெருங்கருத்தும் கிருஷ்ணுவதாரத்திற்குப் பொருந்துவது தான். தீயோருக்குத் தீமை நிறைந்த அந்த வாழ்க்கையே ஒரு பெரும்பாரம்தான். அந்தச் சுமையிலிருந்து அவர்களுக்கும் விடுதலை தருகிறதுகாதற் கடவுளின் தனிப் பெருங் கருணை !

கண்ணன் நடுநிசியில் கம்ஸன் அயர்ந்திருக்கச் சிறைக்காவலர் உறங்கும்போது அவதரிக்கிறுன். இதுவும் புதைபொருள் உள்ள நிகழ்ச்சிதான். கம்ஸன் ஆணவத்திற்கு அறிகுறி; சிறைக்காவலர் புலன்களுக்கு அறிகுறி. ஆணவம் அயர்ந்திருக்கும்போதும் புலன்கள் உறங்கும்போதும் இறையொளி தோன்றும் என்ற உண்மையை நினைவூட்டுகிறது இந்த நிகழ்ச்சி.

கண்ணன் பிறந்ததும் வசுதேவருக்கும் தேவகிக்கும் கம்ஸன் ஆணையால் இடப்பட்டிருந்த விலங்குகள் முறிந்து விழுந்தனவாம். இந்த நிகழ்ச்சி மக்களிடம் உள்ள தெய்வ சக்தி அடிமைச் சங்கிலிகளை உடைத்துக் கொண்டு வெளிப்படுவதற்கு ஓர் அறிகுறியாகும்.

கண்ணன் பிறந்ததும் குழந்தையையா கண்டார்கள் தாய்தந்தையர்? நான்கு கைகளும், அவற்றில் சங்குசக்கரம் முதலிய திவ்ய ஆயுதங்களும் முடியில் கிரீடமுமாகக் காட்சியளித்த ஆச்சரிய ஜோதியைக் கண்டார்களாம். அந்த ஜோதி தேவகிக்குப் பக்கத்தில் குழந்தையாகக் கிடந்ததாம். இதன் பொருள் என்ன? ஜடப்பொருள்களின் ஆதிக்கம் வலுத்து ஆத்மா புறக்கணிக்கப் படும்போதும், அசுர இருட்சக்திகள் வெறியாட்டமாடி உலகைப் பாழாக்கும்போதும், தெய்வத்தின் அதிகார முத்திரையும் பயங்கர சக்தியும் தரித்துவரும் அவதாரம் நிகழ்கின்றதாம். (சித்த சக்தியென்ற வாளாயுதத்துடன் ஒவ்வொரு குழந்தையும் உலகத்திற்கு இறங்கி வருவதாகக் கூறியுள்ளார் டாக்டர். மாண்டிஸோரி.)

பெற்றேர் அன்பு குழந்தையைத் தெய்வமாகக் கொண்டாடுகிறது; இந்தப் பெற்றேர்களின் பேரன்போ தெய்வத்தையே குழந்தையாகக் கொண்டாடும் பேறுபெற்று விட்டதாம். இந்தக் குழந்தை கண்ணனை,

உற்ற புவனம்
அனைத்தும்உதிப் பித்(து), அதனுள்
சிற்றிடைத் தேவகியார்
சீரார் வயிற்றுதித்தான்

என்று விண்ணவரும் முனிவர்களும் ஆச்சரியமாகப் போற்றிஞர்களாம்.

சக்தி நீறு பூத்த நெருப்புப்போல் சௌந்தரியத்தில் அடங்கிக் கிடக்கிறது. எனவே 'திண்ணம் உடையா'னை 'மணிவண்ணம் உடையான்' என்று குதூகலப்படுகிறது ஆயர்பாடி. தேவர் தலைவனே ஆயச் சிறுவன் என்று பாராட்டுகிறது உலகத் துயர் நீங்க உதித்த உத்தமனைத் தங்கள் குலக்கொழுந்தாகக் கண்டு மகிழ்கிருர்கள் நந்தகோபனும் யசோதையும்.

பரம்பொருள் துயிலும் பாற்கடலை ஞானத் தெளிவின் நினைவுக்குறி என்றும், அக்கடல்மீது ஜோதிப் பணமுடி ஆயிரம் கொண்டதாய்க் காணப்படும் பாம்பைத் 'தொல் அறிவு'க்கு அறிகுறி என்றும், அந்தப் பாம்பின்மேல் அறிதுயில் அமர்ந்த மூர்த்தியே கண்ணனுக வந்தான் என்றும் தத்துவப் பொருள் காட்டும் பாரதியார், அசுர ஆணவத்தைக் கிள்ளியெறிய வந்த அவதார மூர்த்தி 'நான் எனும் ஆணவம்' சிறிதும் இல்லாமல் வாழ்க்கை நடத்துகிறுன் என்பர்.

அவதார புருஷனுடைய லட்சணங்களில் முதலாவது லட்சணம் உலகத்தையே தான் எனக் கொண்டு 'நான்' எனும் ஆணவம் முற்றும் துறந்து வாழ்வதுதான். அடுத்த லட்சணம்,

மாரிதான் சில்லரை
வரைந்து பெய்யுமோ?

என்றவாறு நல்லருள் பெய்வதாகும். அந்த அருளின் ஆச்சரியமான எல்லை என்ன தெரியுமா?

... ... பிறர்

ஊனைச் சிதைத்திடும் போதினும்—தனது
உள்ளம் அருளின் நெகுதலும்

என்று பாரதி பாடுகிறார் கண்ணனது அருளின் எல்லையை. இந்த அருள்தான் பகைவருக்கும் அருள் செய்யும் பரமகிருபை யாகும்.

அவதாரமூர்த்தி ஒரு காலவத்தவனாக இருந்தபோதிலும் சென்ற காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்ற மூவகைக்காலம் கடந்திருப்பது இவன் வாழ்க்கைப் பெருங் கலை. ஓர் ஊரன் என்றாலும் கண்ணனுக்கு உலகமெலாம் கோகுலம்தான், பிருந்தாவனம் தான்!

திருவுருவம் (சொரூப விளக்கம்)

'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர'த் தொடங் கிய குழந்தையின் அழகைப் பார்த்துக்கோகு லத்தில் எல்லோரும் பிரமித்துப்போகிறார் கள். நோக்குந்தோறும் நோக்குந்தோறும் குழந்தை புதிய புதிய அழகுகளுடன் திகழ் வதுபோலத் தோன்றுகிறது. 'ஆண் ஒப்பார் இவன் நேர் இல்லைகாண்!' என்று வியக்கும் படி அமைந்திருக்கிறது குழந்தைப் புரு ஷோத்தமனின் அழகு.

குளிப்பாட்டும்போது குழந்தை வாய் திறந்ததும் யசோதைத் தாய் அகில லோகங் களையும் அந்த வாய்க்குள்ளே பார்த்துவிடு கிறாள். மற்றும் உள்ள பெண்களுக்கும் காட்டுகிறாளாம் அந்த அற்புதத்தை. அவர்கள் 'ஆயர் புத்திரன் அல்லன், அருந் தெய்வம்' என்று கொண்டாடுகிறார்கள். ஒவ்வொரு தாய்க்கும் தன் அருமைக்குழந்தை தெய்வக் குஞ்சுதான்; தெய்வ உருவம்தான். குழந்தைக் கண்ணனோ ஒரே திவ்யமங்கள சொரூபமாக, ஸர்வாங்க சுந்தரனாகக் காட்சி தருகிறான்.

குழந்தையின் இயக்கம், இளநகை, தளர் நடை, மழலைப்பேச்சு, ஆட்டம் ஓட்டம், விளை யாட்டு, துஷ்டத்தனம் என்ற நிலைகளில் கண்ணனை பெரியாழ்வார் கண்டு காட்டுகிறார். சின்னஞ்சிறு பாதமலர்களையும் காட்டுகிறார்; அந்தப்பாதங்களில் பத்து விரல்களையும் காட் டுகிறார். கணைக்கால், முழங்கால், தொடை, வயிறு முதலான அவயவங்களையும், காட்டு கிறார். 'தந்தக்களிறுபோல் தானே விளையாடும்' கண்ணனின் மார்பு, தோள், கழுத்து, வாய், மூக்கு, கண், நெற்றி, தலை முதலான அவ யவங்களையும் அதிசயமாய்க் காட்டுகிறார். 'வாக்கும் நயனமும் வாயும் முறுவலும்' கண்டு கண்டு பரவசமாகிறார்.

'முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ!' என்று நம்மாழ்வார் பெருமா னைப் பாடுகிறார். பெரியாழ்வாரோ குழந்தைக் கண்ணனைத் தமது மானஸத் தொட்டிலில் இட்டுத் தாமே யசோதையாக நின்று தாலாட்டும்போது,

சோதிச் சுடர்முடியாய்!
தாலேலோ

என்று பாடுகிறார்.

குழந்தையின் முகஜோதியும் சுடர் களுமே ஒரு ஜோதிக்கிரீடமாகத் தோன்று கின்றனவாம். இராஜாதிராஜனும் தேவாதி தேவனுமாகிய குழந்தையல்லவா? ஜோதிச் சுடர்முடி அகிலலோக ஆட்சிக்கும் மாட்சிக் கும் அறிகுறி.

கண்ணனது குழந்தைத் திருவுருவத் தைப் பார்த்துக்கொண்டே தாலாட்டும் தாயுள்ளம் படைத்த பெரியாழ்வார் குழந்தை யின் முடியழகிலிருந்து கண்களைப் பறித்துக் கொள்ள முடியுமானால், பிறகு ஸர்வசக்தியின் அறிகுறியான சுந்தரத் தோள்களையே பார்த் துக்கொண்டிருக்கலாம் என்ற குறிப்புடன் பாடியிருக்கிறார்.

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்!

என்ற நிலைதானே கண்ணன் திருவுருவத்தில் ஈடுபடுகிறவர்களின் நிலை!

இந்தத் திருவுருவப் பேரெழிலில் ஈடு படும் பக்தர்களெல்லாம் தெய்வத்தைக் குழந்

கதயாகத் தியானிப்பதுடன் ஒவ்வொரு குழந்தையிடத்திலும் தெய்வ சௌந்தரியத்தைக் காண்கிறார்கள். பெரியாழ்வார் ஆபரணங்களுக்கெல்லாம் ஆபரணமான திருமேனி என்று போற்றுகிறார் கண்ணனின் குழந்தை யுருவத்தை. அப்படியே இயற்கை யழகுகளுக்கெல்லாம் அழகு தருகிறான் அழகனாகிய கடவுள் என்பது பக்திமதப் பெருங்கொள்கைகளில் ஒன்று. 'குழந்தைக் கண்ணனை நேசி, நம்பு; குழந்தை போல நம்பவேணும், நேசிக்க வேணும்' என்பது கிருஷ்ணபக்திப் பெருங் கொள்கைகளில் ஒன்றாகும்.

ஜகன்மோகன பாலகோபாலன், ஜகன் மோகன ராஜகோபாலன், ஜகன்மோகன வேணுகோபாலன் என்றெல்லாம் பக்தர்கள் கண்ணனது பிள்ளைமைப் பேரழகை அனுபவித்துப் பேறுபெற்றிருக்கிறார்கள். அழகுக்கு முடிவே இல்லையென்று சொல்லும்படி வளர்ந்து கொண்டிருக்கும் கண்ணனது குறும்புத்தனத்திற்கும முடிவே கிடையாது என்று வியந்து வியந்து ஈடுபடுகிறார்கள். ஆம்; தீராத விளையாட்டுப் பிள்ளையாகக் கண்ணன் திருவுருவைத் திரும்பத் திரும்பப் படம் பிடித்துப் பார்த்துப் பரவசமாகியிருக்கிறது பக்தருலகம். இத்தகைய பக்தியனுபவங்களின் சிகரம் ஆழ்வார்களின் கிருஷ்ணானுபவம்.

தீராத விளையாட்டு; ஓயாத தொல்லை; ஆனால் இந்தத் திருவத்தைக் கண்டவர்களுக்கெல்லாம்—மானஸிகமாய் அனுபவித்தவர்களுக்கும் தான்—குறையாத திருப்தி 'தயிர் உண்ட பொன் வயிறு' என்று போற்றுகிறார் திருமங்கை மன்னன். வெண்ணெய் உண்டு கட்டுண்ட அந்த எளிமையில் ஈடுபடுகிறார் நம்மாழ்வார். வெண்ணெயும் மண்ணையும் உண்ட அந்த லீலைகளில் பகவத்கீதையின் சமரசப் பெருநெறிக்கே ஒரு வித்தையும் கண்டு கொண்டதுபோல் குதூகலம் அடைகிறது பொய்கையாழ்வாரைப் போன்ற சமரசப் பேரறிஞர்களின் உள்ளம்.

பக்தியனுபவம் ஏற்படும்போது கிருஷ்ண லீலைகளின் உட்பொருளும் புலனாகும்; கண்ணன் திருவுருவத்தின் தத்துவமும் தெளிவாகும். பக்தியனுபவம் அதிகரிக்க அதிகரிக்க, உட்பொருளும் தத்துவப் புதையல்களும் மேலும் மேலும் தெளிவாகும் என்பர். 'ஜகன்மோகன வேணுகோபாலன்' என்ற நிலையில் கண்ணனைப் பாடியிருக்கும் பெரியாழ்வாரின் பாசுரங்களில் பக்தியனுபவத்திற்கும் கவிதானுபவத்திற்கும் பொதுவான சிகரம் ஒன்றைக் காண்கிறோம்.

குழலோசை 'வாருங்கள்!' என்று வழி காட்டி அழைக்க வந்து சேர்ந்தவர்களெல்லாம் இசையுருவம் போலக் காட்சிதரும் கண்ணனை நெருங்கியதும் ஒழுங்குபெறத் தொடுத்த பூமாலைகள் போல் வரிசை வரிசையாகச் சூழ்ந்துகொண்டு, முகத்தை முகங் கொண்டு எதிர்நோக்க முடியாமல் நாணி நிற்கிறார்களாம். அன்புக் கடவுள் ஆத்மாக்களைத் தேடித் தவிக்கிறான் என்பது உட்பொருள். பக்தர்கள் அவனைத் தேடுகிறார்கள் என்றால் அவனும் இவர்களைத் தேடுகிறான் என்பது உண்மை.

இடது மேல் வாய்ப்புறத்தை இடது தோளோடு சாய்த்து இரு கையும் குழலோடு சேரப் புருவம் நெரிந்து மேலேறக் கண்ணன் வேணுகானம் செய்கிறான். வயிறு குடம் போலக் காண்கிறது. காற்றைப் பூரித்து நிறுத்தி வாயால் விட்டு விட்டு ஊதும்போது, குழலின் துளைக்கு அளவாக உதடுகள் இரண்டு அருகும் குவிந்து காண்கின்றன. அழகிய சிறுவிரல்கள் குழலின் துளைகளைப் புதைத்துப் புதைத்துத் திறக்கின்றன. கண்கள் துளைகள் தோறும் ஓடுகின்றன. செந்தாமரைப் பூவை வண்டுகள் சூழ்ந்து கொள்வதுபோல், தலைரோமம் இருண்டு சுருண்டு விளங்குகிறது. அந்த முகமலர்களிலிருந்து பெருகும் இசைத்தேன் குழலோசை பெரியாழ்வார் கவிதையில் குழலூதும் கோபாலன் சித்திரம் இது.

பொன்னிறமான ஆடை உடுத்து மயில்-தோகையும் அணிந்திருக்கிறான்.

கருங்கண் தோகைமயில் பீலிஅணிந்து,
கட்டிநன்(கு) உடுத்த பீதகஆடை
அருங்கல உருவின் ஆயர்பெருமான்

என்றும்,

சுருண்(டு) இருண்டகுழல்
தாழ்ந்த முகத்தான்

என்றும் பெரியாழ்வார் தம் கவிதைக் கண்ணாடி வாயிலாக நமக்கும் ஜகன்மோகன

வேணுகோபாலனை ஒருவாறு தோற்றம் அளிக்கச் செய்கிறார்.

'அதோ கோகுலத்திற்கும் பரமபதத்திற்கும் யுவராஜா! அந்த மோகன சொரூபம் வீசும் அமுதகீத வலையில் சுருக்குண்டு விண்ணும் மண்ணும் ஒன்றுபடுவதைப் பாருங்கள்! சகோதர தர்மம் என்ற பாசத்தால் அனைவரும் கட்டுண்டு வாழும்படி வழிகாட்டும் அந்தக் குழலிசையைக் கேளுங்கள்!' என்று காட்டுகிறார் பெரியாழ்வார். அந்த மோகன சொரூபமே உருகிவருவதுபோல் பெருகிவரும் மோகனக் குழலிசையின் ஓர் அம்சம்தான் கீதை என்பது அந்தரங்கமான ஒரு கொள்கை.

கண்ணனுடைய வேய்ங்குழல் போல் இவன் ஊதும் சங்கும் இவனது வசீகர அழகை அதிகரிக்கச் செய்கிறதாம். கண்ணபிரான் தன் வலம்புரிச் சங்கை வாயில் வைத்து ஏதோ வெற்றி யடைந்து விட்டது போல் வருவதை உருவெளித் தோற்றத்தில் ஆண்டாள் பார்க்கிறாள். அந்தச் சங்கை நோக்கி,

> கருப்பூரம் நாறுமோ?
> கமலப்பூ நாறுமோ?
> திருப்பவளச் செவ்வாய்தான்
> தித்தித் திருக்குமோ?

என்று கேட்கிறாள். இதே சங்கு போர்க்களத்திலே எதிரிகளின் உள்ளத்தைக் கலக்குகிறது.

ஜகன்மோகனச் சிறுவனான கண்ணன் திருவுருவத்தின் மீது கோபிகைகள் காதல் கொண்டிருந்தனர் என்பது ஒரு பிரசித்தமான செய்தி. 'இறைவனும் இயற்கையும் சிறுவனும் சிறுமியுமாக விளையாடுகிறார்கள்; இவர்கள் காதலரும் கூட' என்பது யோகி அரவிந்தரின் வாக்கு. இந்தத் தத்துவத்தை ஆயச் சிறுமிகளுடன் கண்ணன் குரவைக் கூத்து முதலான விளையாடல்கள் புரிந்த கதைகளின் உட்பொருளாகக் காணலாம்.

கோபிகைகளைக் குறிக்கும் கதையைச் சுற்றி எண்ணிறந்த கற்பனைகளும் கவிதைகளும் பக்தியுள்ளங்களில் விளைந்திருக்கின்றன. ஆத்மா பரமாத்மாவுடன் பக்தியால் ஒன்றுபடுவதற்கு மனிதக் காதலே சிறந்த அறிகுறியாகும் என்பர் **ஸ்வீடன் பர்க்.** கிறிஸ்து வேதத்தில் **ஸாலமன் கீதங்கள்** என்ற பகுதியிலும் கடவுள் மணவாளனாகவும் ஆத்மா மணப்பெண்ணாகவும் வருணிக்கப்படுவதைக் காண்கிறோம். ஓங்கி எரியும் தீயைப் போல் ஆத்மாவின் பக்தி ஜொலிக்கும்போது கடவுளைக் காதலனாகக் கருதுவது இயற்கை என்று யோகி அரவிந்தரும் ஆண்டாளைப் பற்றிய தமது ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் கூறியுள்ளார்.

கண்ணன் திருவுருவத்தில் அழகிய மணவாளன் என்ற நிலைக்கும் இடம் உண்டு. எனவே காதல் துறையில் 'அவா அறுத்து வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்' என்று போற்றப்பெறும் நம்மாழ்வாரும் பாடியிருப்பதைக் காண்கிறோம்.

> தூதுசெய் கண்கள்கொண்(டு) ஒன்றுபேசி,
> தூமொழி இசைகள்கொண்(டு) ஒன்றுநோக்கி,
> பேதுறு முகம்செய்து நொந்துநொந்து
> பேதைநெஞ்(சு) அறஅறப் பாடும்பாட்டை
> யாதும்ஒன்(று) அறிகிலம், அம்மஅம்ம!
> மாலையும் வந்தது, மாயன்வாரான்!

என்பது ஞானதேசிகரான நம்மாழ்வார் வாக்கு.

கண்ணன் திருவுருவத்தை ஆழ்வார்களின் தலைவரான இப்பெரியார் எப்படி உய்த்துணர வைக்கிறார் பாருங்கள். தூது பேசுகிற கண்களைக் காட்டுகிறார் முதல் முதல். இசை பாடுகிற திருவாயைக் காட்டுகிறார் அடுத்தபடியாக. பார்க்க வேண்டிய கண்கள் பேசுகின்றனவாம். வாயிலிருந்து வரும் இசை பார்க்கிறதாம். இதயத்திலே எங்கேயாவது ஒரு மூலையில் கள்ளங்கவடு இருக்கிறதோ என்று தேடித் துருவிப் பார்க்கிறதாம் கண்ணனின் இசை.

இப்படி வந்து சேர்ந்த தெய்வக் காதலனின் திருமுகத்தைச் சித்திரிக்கும் ஆழ்வார் வாக்கு ஊன்றி நோக்கத்தக்கது:

> பேதுறு முகம்செய்து
> நொந்துநொந்து...

'இந்த ஆத்மாவை இன்னும் அடையவில்லையே!' என்ற அந்த நோவு, அந்த ஏக்கம் அப்படியே தெரிகிறது இந்தத் திருவுருவத்

தின் முகத்திலே! நொந்து நொந்து பாடு கிருஞம்.

'பேதுறுமுகம்' என்ற சொற்ருெடரைப் பாருங்கள். சொல்லேயா, சொற்ருெடரையா பார்க்கிறீர்கள்? 'உன் காதலுக்காகப் பைத்தியமாக இருக்கிறேன்!' என்று சொல்லாமல் சொல்லுகிறது முகம்.

'என் கள்வா!' என்று ஆழ்வார் அழைக்கிருர், இப்படி முகம் காட்டி வந்து நிற்கும் திருவுருவை. அழகாலே கவர்ந்து உள்ளத்தைத் திருடியது மட்டுமா? தமது காதலேக் காட்டிலும் அதிகமான காதலே ஈசன் புலப்படுத்துவதும் இவருள்ளத்தைக் கொள்ளே கொள்ளுகிறது.

ஒரு குழந்தையோடு கொஞ்சுவதுபோல் 'வஞ்சக் கள்வன் மாமாயன்' என்றெல்லாம் கொஞ்சிப் பேசுகிருர் நம்மாழ்வார். 'கேட்பார் செவி சுடு கீழ்மை வசவுகள்' பொழிந்த சிசுபாலன் முதலான துஷ்டர்களுக்கும் முடிவில் அருள் புரிந்த கோபாலன் இவரது செல்லப் பேச்சால், காதல் பேச்சால் மிகவும் உருகிப் பேரருள் புரிகிருஞம்.

இருட்டறையில் விளக்குப்போல் இந்த இருள்தருமா ஞாலத்தில் இன்றும் கண்ணன் திருமேனி உபாசனேக்கும் தியானத்திற்கும் உதவுகிறது என்பது பக்தர்களின் நம்பிக்கையும் அனுபவமுமாகும். கண்ணன் அவதரிப்பதற்குத் துஷ்ட நிக்கிரகமும் ஒரு நோக்கம்தான். ஆனல் பெரு நோக்கம் பக்தர் மீது வைத்த காதல்தான். அன்பர்களின் காதலேப் பெறுவதற்கு இசைந்த திருமேனி கண்ணன் திருமேனி.

அளவற்ற அழகிய குணங்களே ஒப்பற்ற ஒளியுடனும் அழகுடனும் கூடிய கண்ணன் திருமேனி. ஆதியஞ்சோதியாகப் பரமபதத்தில் வீற்றிருந்த பெருமாள் ஆத்மாக்கள் மீது வைத்த காதலால் இவ்வுலகில் அவதரித்துப் பரஞ்சோதியானுன் என்று சொல்லத் தக்க நிலேயில் கண்ணன் திருமேனி காட்சியளித்தது என்பர்.

திலகவதியார் சித்த வைத்திய சாலே பார்மஸி ஆராய்ச்சி மன்றம் திறப்பு விழா

தஞ்சை மாவட்டம், திருப்புகலூர் ஸ்ரீ அக்னீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்று வரும் திலகவதியார் சித்த வைத்திய சாலேக்கு மருந்துகள் தயார் செய்வதற்காக பார்மஸி ஒன்றை சென்னே சுகாதார இலாகா அமைச்சர் திரு. எம். ஏ. மாணிக்கவேல் அவர்கள் 9—1—'59-ல் திறந்து வைத்தார்கள். இவ்விழாவிற்கு பூண்டி திரு. ஏ. கிருஷ்ணசாமிவாண்டையார். எம். எல். சி., அவர்கள் தலேமை வகித்தார்கள். மாவட்ட ஆட்சித் தலேவர் திரு. ஏ. வி. உலோகநாதன், ஐ. ஏ. எஸ்., மாவட்ட சுகாதார அதிகாரி திரு. வி. செல்வராஜ் முதலியவர்கள் பங்கெடுத்துக் கொண்டு சித்த வைத்தியத்தின் பழம் பெருமைகளேயும், ஆங்கில முறையால் குணமடையாத வியாதிகளேயும் இம்முறையால் குணப்படுத்த முடியுமென்றும், தற்சமயம் தாழ் நிலேயடைந்துள்ளதை வெகுவாகப் பரப்பி எல்லாம் சித்த வைத்திய முறையில் நடைபெறச் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். வந்திருந்தோருக்கு மேற்படி தேவஸ்தான பொருள்காப்பாளர் திரு என். சீனிவாசன், பி. ஏ., பி. எல்., அவர்கள் பார்மஸியைச் சுற்றிக் காண்பித்தார்கள். இப்பார்மஸி சித்த வைத்திய பூபதி திரு. ஜி. கண்ணுசாமி பிள்ளே அவர்கள் மேற்பார்வையில் நடைபெற வுள்ளது. மேற்படி தேவஸ்தான நிர்வாக தர்மகர்த்தர் திரு எம். டி. தியாகராஜ பிள்ளே, எம். எல். ஏ., அவர்கள் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.



வல்லாள மகாராஜன் கோபுரம்

திருவண்ணாமலை

உண்ணாமுலை உமையாளொடும்
உடன்ஆகிய ஒருவன்
பெண்ஆகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ஆர்ந்தன அருவித்திரள்
மழலைம்முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.

—திருஞானசம்பந்தர்.

நடுநிலையாளர் மல்கும் நடுநாட்டின் கண்ணே பாடல்பெற்ற பதிகள் இருபத்திரண்டில் ஒன்று திருவண்ணாமலை. 'திருவண்ணாமலையை நினைக்க முத்தி' என்பது பழமொழி. இதை,

'தில்லையைக் காணக் காசியிலிறக்கச்
சிறக்கு மாரூர்தனிற் பிறக்க
எல்லையி லருணகிரிதனை
நினைக்க யெய்தலா முத்தி'

என்னும் அருணாசல புராணப் பாடல் விளக்குகிறது. ஞானசம்பந்தப்பெருந்தகையார், 'நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர் உறைகோயில்' என்று கூறுகிறார். இது பஞ்சபூதத்தலங்களில் தேயு (அக்கினி) தலம். ஆருதாரத் தலங்களில் ஒன்ருன மணிபூரகத் தலமாகும் பெற்றியுமுடையது. சோணசைலம், சோணகிரி, அருணாசலம், அருணகிரி, திருவருணை, திருவண்ணாமலை, கௌரிநகரம், தேசுநகரம், சிவலோகநகரம், முத்திபுரி, சுத்தநகரம், தலேச்சுரம், ஞானநகரம், அனற்கிரி, சோணை வெற்பு, அருணை வெற்பு, உயிர்வலிகாந்தம் முதலிய பல பெயர்கள் இப்பழம்பதிக்கு உண்டு. மகாசிவராத்திரியின் தோற்றுவாய் கொண்டதும், பார்வதிதேவியார் தவம் செய்து இறைவனுடைய இடப்பாகம் பெற்றதும் இத்தலத்தின் தனிப்

பெருஞ் சிறப்புக்களாகும். திருமாலும் நான்முகனும் தமக்குள் யார் பெரியவர் என்று வாதிட்டுக் கொண்டனர். சிவபெருமான் அவர்கள் முன் நீண்ட ஜோதி யுருவாய்த் தோன்றினன். அவன் அடிமுடிகளைக் காண இருவரும் பன்றியாகவும், அன்னமாகவும் உருக்கொண்டு கீழும் மேலுமாகத் தேடினர். அடிமுடி காணது வருந்தினர். இறைவன் அவர்களுக்கு இரங்கி காட்சி அளித்தான். தீ யுருவாய் (இலிங்கோற்பவமாகி) நிறைந்து நின்றதே மலையுருவாயிற்று. அரியும் அயனும் மலை உச்சியில் எந்நாளும் ஜோதி தெரிய வேண்டுமென வேண்டினர். அவ்வாறே சிவபெருமான், 'ஆண்டுதோறும் 'கார்த்திகை மாதம் பூர்வ பட்சம் கார்த்திகை நட்சத்திரத் தன்று மலை உச்சியில் ஒரு ஜோதி காட்டுவோம்' என்று அருளிச் செய்தார். அதுதான் இப்போது கார்த்திகைத் தீப தெரிசனப் பெரு விழாவாக நடைபெறுகிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு களிக்கின்றனர்.

திருவாசகத்தில்,

''பிரமன் அரி என்றிருவர்
தம் பேதைமையால்
பரமம் யாம் பரமம்
என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனுர் அழலுருவாய்
அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா
தோனேக்கம் ஆடாமோ''

என்று கூறப்பட்டிருக்கிறது. திருமாலும் நான்முகனும் அடிமுடி தேடிய வரலாற்றை திருமுறைகளிலும் ஏனைய சைவ சமய நூல்களிலும் எண்ணிறந்த இடங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில்

''ஒரேனம்தனைத்தேட ஒளித்தருளும்
இருபாதத் தொருவன்''

என்று இச்செய்தியைக் குறிக்கிருர். அழல் உருவே மலை யுருவாயிற்று என்பது வரலாறு. மலைகள் நான்கு வகையென்று நில நூல் (Geology) கூறுவதுள் இம்மலை நெருப்பினல் வந்தது (igneous rock) என்று நிலநூல் வல்லுநர் கூறுகினறனர். இம்மலை கடல் மட்டத்துக்குமேல் 2668 அடி உயரமுள்ளது. மலையின் நடுப்பாகத்திலும் அடிவாரத்திலும் குகைகள், ஆச்சிரமங்கள், தீர்த்தங்கள் முதலியன நிறைந்துள்ளன.

மலையின் அடிவாரத்தின் ஒரு பாங்கர் தான் அமைந்துள்ளது அருணசலேசுவரர் திருக்கோயில். இருபத்து நான்கு ஏக்கர் பரப்புள்ளது. தென் இந்தியாவிலேயே மிகப் பெரிய கோயில்களில் ஒன்று. கோயிலின் மதில்கள் மிகவும் உயரமானவை. நான்கு பக்கங்களிலும் நான்கு கோபுரங்கள் வானளாவி நிற்கின்றன. கீழ் வாயிற்கோபுரம (இராஜ கோபுரம்) 11 நிலைகளுடன் 217 அடி உயர முள்ளது. விஜய நகர மன்னர் கிருஷ்ணதேவ ராயர் கி. பி. 1516ல் தன் வெற்றிக்குறி குறியாகக் கட்ட ஆரம்பித்தனர். அதைத் தஞ்சை அரசர் சேவப்ப நாயக்கர் முடித்தார். தெற்குக் கோபுரத்தைத் திருமஞ்சனக் கோபுரம் என்றும், மேற்குக் கோபுரத்தை பேய்க்கோபுரம் என்றும், வடக்கிலுள்ளதை



வளைகாப்பு உற்சவ மண்டபம்

அம்மணியம்மாள் கோபுரம் என்றும் வழங்கு கின்றனர். அம்மணியம்மாள் என்ற துறவி 200 ஆண்டுகட்குமுன் வடக்குக் கோபுரத்தைக் கட்டினர் என்பர்.

இராஜ கோபுரத்தின் உள்பாகத்தில் வலப்புறமாக ஆயிரக்கால் மண்டபம் இருக்கிறது. இதையும், இதன் அருகிலுள்ள திருக்குளத்தையும் கிருஷ்ணதேவராயர் எடுப்பித்தார் எனக் கல்வெட்டுக் கூறுகிறது. இடதுபுறம் காணப்படுவது கம்பத்திளையனர் சந்நிதி. அருணகிரிநாதர் பாடலுக்கிரங்கி பிரபுட தேவமாராஜனுக்குக் காட்சியளித்த முருகன் சந்நிதி திருக்குளத்தின் வடபாலுள்ள பதினறுகால் மண்டபத்தில் ஒரு தூணில் **கம்பத்திளையனர்** கோயிலாக உள்ளது. (முன் அட்டைப்படம் காண்க). சிவகங்கை தீர்த்தத்தின் வடமேற்கில் சர்வசித்தி விநாயகர் சந்நிதி இருக்கிறது. ஆயிரக்கால் மண்டபத்தின் தென்மேற்குத் திசையில் பாதாள லிங்கேசுவரர் கோயில் உள்ளது.

பெரிய நந்தியின் எதிரில் காணப்படுவது வல்லாள மகாராஜன் கோபுரம். அருணகிரிநாதர் இக்கோபுரத்தின் மீதேறி உயிர் மாய்த்துக்கொள்ளக் கீழே குதித்தபோது முருகப்பெருமான் அவருக்கு ஒரு தீங்கும் வராமல் தாங்கிக்காத்தருளினர். இதன் வடபால் கோபுரத்திளையனர் சந்நிதி இருக்கிறது.

அடல் அருணைத் திருக்
கோபு ரத்தே
அந்த வாயிலுக்கு
வடஅருகிற் சென்று
கண்டு கொண்டேன்'

என்று அருணகிரிநாதர் இதைக் குறிப்பிடுகின்றார். வல்லாள மகாராஜன் கோபுரத்தின் உள் சென்றதும் வடபுறம் அமைந்திருப்பது சத்தி விலாச சபை மண்டபம். இங்கு சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும். இம்மண்டபத்தருகில் புரவி மண்டபம், காலபைரவர் சந்நிதி, பிரம தீர்த்தம் முதலியன உள்ளன.

நான்காம் பிரகாரத்தின் கீழ்த்திசையில் கிளிக்கோபுரம் இருக்கிறது. அருணகிரிநாதர் கிளியுருவம் தாங்கிய வரலாற்றையொட்டி அதற்கு அப்பெயர் வந்தது. கிளியுருவமும் கோபுரத்தில் அமைந்திருக்கிறது. இக்கோபுரத்தின் உள் எதிரில் தோன்றும் பதினறுகால் மண்டபத்தில்தான் தீபதெரிசனத்தன்று பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளிக் காட்சி வழங்குவர். மூன்றும் பிரகாரம், இரண்டாம் பிரகாரம் இவைகளைத் தாண்டி உள்ளே சென்ருல் அதிகார நந்திகேசுவரரைக் காண்கிருேம். கர்ப்பக்கிரகத்தில் அண்ணாமலையார் காட்சியளிக்கிருர். சாதாரணமாகக் கோயில்களில் அஷ்டபந்தன மருந்து சாத்திப் பிரதிஷ்டை செய்வார்கள். ஆனல் இங்கு அண்ணாமலையார் சுவர்ண பந்தனம் (தங்கம்) செய்யப்பெற்றுள்ளது தனிச் சிறப்புடையது. இரண்டாம் பிரகாரத்தின் வடதிசை வாயில் சென்று தேவியின் திருச்சந்நிதி யடையலாம். அம்பிகையின் திருநாமங்கள் உண்ணாமுலை, அபிதகுசாம்பாள் என்பன. இத்தலத்தின் திருவிருட்சம் மகிழமரம். எல்லா மாதங்களிலும்

மகிழமரம்—தலவிருட்சம்

திருநாட்கள் நடைபெறுகின்றன. கார்த்திகை தீபத்தையொட்டி நடைபெறும் பத்துநாள் திருவிழாவே மிகவும் சிறப்பானது.

திருவண்ணுமலேக்குச் செல்பவர் மலேயை வலம் வருவது வழக்கம். சுற்றிவர அழகிய சாலே யொன்றுள்ளது; எட்டுக்கல் தொலே வுடையது. இம்மலே வலம் வருவதற்குள் 360 தீர்த்தங்களும், 400 சிவலிங்கங்களும் உள்ளன. நான்குகல் தொலேவில் ஏழு ஏக்கர் பரப்பில் ஒரு திருக்கோயில் இருக்கிறது. இதை அடிஅண்ணுமலே என்று வழங்குகின்றனர். அப்பர் பெருமான் அணிஅண்ணுமலே எனப் புகழ்ந்து பாடுவது இதுவே என்பர். சிலர் ஆதி அண்ணுமலே யென்றும் கூறுகின்றனர். இக்கோயிலின் பாங்கர் மாணிக்கவாசகர் தீர்த்தம் இருக்கிறது. இங்கு மார்கழி மாதம் நீராடச்சென்ற மங்கையர்க்காகவே, திருவெம்பாவையை மாணிக்கவாசகர் பாடியருளிஞர் என்பர். மலேமேல் ஏறிச் செல்லும் வழியில் முலேப்பால் தீர்த்தம், குகை நமச்சிவாயர் கோயில், குருநமச்சிவாயர் சந்நிதி முதலியவை உள்ளன. அம்பிகை தவம் செய்து இடப்பாகம் பெற்ற ஐதிகம் பவளக்குன்று என வழங்கும் குன்றின்மேலுள்ள ஆலயத்தால் விளக்கமுறுகிறது.

இத்தலத்தை நாடிவந்து இறைவன் இன்னருளுக்கு இலக்கானவர்கள் பலர். வச்சிராங்கதபாண்டியன், வல்லாளமகாராஜன், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், குகை நமசிவாயர், குருநமசிவாயர், ஆதிதெய்வ சிகாமணி அருணுசல தேசிகர், ஈசானதேசிகர், பிரபுடதேவ மகாராஜன், அருணகிரிநாதர், சிவப்பிரகாசர், சேஷாத்திரிசுவாமிகள், இரமண அடிகள் முதலியோர் முக்கியமானவர்கள்.

இப்பழம்பெரும் பதியைப் பற்றி எழுந்த நூல்கள் பலப்பல. இருக்குவேதம், அதர்வண வேதம், சரபஉபநிடதம், சூதசங்கிதை, உருத்திரசங்கிதை, சிவமகாபுராணம், சிவரகசியம், தேவாரம், பதினேராம் திருமுறை, திருப்புகழ், பெரிய புராணம், கந்தபுராணம், அருணுசலபுராணம் இவைகள் குறிப்பிடத்தக்கவை.

திருஞான சம்பந்தர் இத்தலத்திற்கு இரண்டு பதிகங்கள் அருளியுள்ளார். இயற்கைக் காட்சியை எழிலுறக் கூறுகிருர். "முதுவேய் உகுத்த முத்தம் பலகொண்டு கூடிக் குறவர் மடவார் குவித்துக்கொள்ள வம்மினென்று ஆடிப்பாடி அளக்கும் சாரல் அண்ணுமலேயாரே" என்னும் பகுதி கண்டின்புறப்பாலது. திருநாவுக்கரசர் மூன்று பதிகங்கள் ஓதியுள்ளார். 'முந்திச் சென்று முப்போதும் வணங்குமின்' என்றும், ஆடிப்பாடி அண்ணுமலே கைதொழ மேலே வினேகள், இப்போதுள்ள வினேகள் ஓடிப்போகும் என்றும் கூறுகிருர். மாணிக்கவாசகர் இத்தலத்தே தங்கியிருந்தபோதுதான் திருவெம்பாவையையும், திருஅம்மானேயையும் பாடியருளிஞர். அவற்றின் பெருமையை ஈண்டு விரித்துரைக்க வேண்டியதில்லே. சிந்தைக்கினிய செவிக்கினிய திஞ்சுவை ததும்பும் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், அருணேயென்ற பெயரில் 58 பாடல்களும், அருணேக்கோபுரம் என 13 பாடல்களும், அருணேத் திருவீதி என வரும் 8 பாடல்களும், அருணேக்கோபுர வடக்கு என்று வரும் 2 பாடல்களும், அழலோங்கிய வோங்கல், அழல் கிரிப்பதி, கனல் மால்வரை, அருணேக்கோபுரக்குணக்கு, அருணேத் தென்திசை, அருண மதில் வடசார் என்ற பெயர்களுடன் தனித் தனி ஒரு பாடலும் ஆக 87 பாடல்கள் இப்பதியைப் பற்றிப் பாடியுள்ளார். இன்னும் அவர் பாடிய கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, திருவகுப்பு முதலியவைகளிலும் இத்தலத்தைப் பற்றிப் போற்றியிருக்கின்ருர். 'சைவத்தின் மேற் சமயம் வேறிலே அதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேற் றெய்வமில்'லென்று வீறுகொண்டு கூறிய சைவ—எல்லப்ப நாவலர் இயற்றிய அருணுசல புராணம் மிகவும் புகழ் பெற்றது. அவரே இயற்றிய திருவருணேக் கலம்பகம், கலம்பகநூல்களில் சிறந்ததொன்று.

இன்னும் இவர் திருவருணேயந்தாதி பாடியுள்ளார். மறைஞான சம்பந்த தேசிகர் இயற்றிய அருணகிரிப் புராணம் என்ற நூலும் இத்தலத்தைப்பற்றியதே. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியசோணசைல மாலே, நமசிவாய சுவாமிகள் இயற்றிய சாரப்பிரபந்தம், திருச்சிற்றம்பலநாவலரின் அண்ணுமலேச்சதகம், சோணுசல முதலியாரின் கார்த்திகை தீப வெண்பா, சோணுசல வெண்பா, சோணுசல சதகம், திருவருணேக்

கலிவெண்பா, திருவருட் பிரகாச வள்ளலாரின் திருவண்ணுமலைத் திருவருட்பதிகம், சின்ன கவுண்டரின் உண்ணுமுலையம்மன் சதகம், புரசை-சபாபதி முதலியாரின் ஸ்ரீ அருணுசலேசுவரர் பதிகம், காஞ்சி-சபாபதி முதலியாரின் அருணுசல சதகம், யாழ்ப்பாணத்து நல்லூர்-தியாகராஜ பிள்ளையின் அண்ணுமலையார் வண்ணம், ஞானசித்த சுவாமிகள் இயற்றிய திருவண்ணுமலைப் பதிகங்கள், குகை நமசிவாய தேவர் அருளிய திருவருணைத் தனி வெண்பா முதலியவை இப்பதியைப் பற்றியனவே. அருணுசலமகாத்மியம், அருணகிரியந்தாதி, அருணுசலீசர் பதிகம், உண்ணுமுலையம்மன் பதிகம், அருணுசலேசுவரர் நவகாரிகைமாலை, உண்ணுமுலையம்மன் வருகைப் பதிகம், அருணுசல அட்சரமாலை, அண்ணுமலைப் பஞ்சரத்தினம், உருத்திரசங்கிதைத் தோத்திரங்கள் முதலிய இன்னும் பல நூல்கள் இத்தலத்தைப்பற்றிப் புகழ்ந்துள்ளன.

இந்த கோயிலில் பல தமிழ்க் கல்வெட்டுக்களும் கிரந்த கல்வெட்டுக்களும் காணக்கிடக்கின்றன. பலவகைச் செய்திகளுள்ள கல்வெட்டுக்கள் நிறைந்த கோயில்கள் சிலவற்றுள் இது ஒன்றெனக் கூறலாம். கல்வெட்டுக்களில் சமயம், வரலாறு, தமிழர் பழக்க வழக்கங்கள் முதலியவைகளைப்பற்றிய குறிப்புக்கள் மிளிர்கின்றன. எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் கூறலாம். கோயில் திருவிளக்குகளுக்கும், பூசை நைமித்திகங்களுக்கும் நிலங்கள், பொன், ஆபரணங்கள், ஆடுமாடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பாணர் தலைவன் ஒருவன் கோயிலைப் புதுப்பித்தான்; ஒருவன் குளத்தைச் சீர்ப்படுத்தினன்; கோயிலில் வேதம் ஓதுவோருக்கு நிலங்களை விட்டான் ஒருவன்; மான்வேட்டையில் கைக்கணை தப்பி ஒரு மனிதன் மேற்பட்டு அவன் இறக்க, அதற்குக் கழுவாயாகக் கோயிலில் விளக்கேற்றிவைக்கப் பசுக்களையும் எருதுகளையும் ஈந்தான் ஒருவன்; வணிகர்கள் விழாவிற்குக் கொடிச் சீலைகள் தருவதாக வாக்குறுதி செய்தனர். நில விற்பனை, நிலப் பரிவர்த்தனை, வரிகளைப் பயன்படுத்தும் முறை, மாடவீதி மனைகளை விற்பதற்கு விதிகள், கோயில் நிலங்களுக்கு வரி தள்ளுகடை (Remission of land revenue) கிருஷ்ண தேவராயன் வெற்றி, துலாபாரதானம் இவைகளைப்பற்றியும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராஜநாராயண சம்புவராயர் என்பார் கோயிலின் ஒரு கோபுரத்தைக் கட்டியதாக ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. இக் கோபுரத்தில் உட்கார்ந்து வாமதேவர் 'ஜீர்ணோத்தாரதசகம்' என்ற கோயிலைப் புதுப்பிக்கும் முறைகளைக்கொண்ட நூலை எழுதியதாகச் சொல்லப்படுகிறது. கல்வெட்டுக்களில் அரசர், அரசியர், குறுநில மன்னர், வணிகர் முதலியோர் பலருடைய பெயர்கள் இருக்கின்றன. சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், இராஷ்டிரகூடர், ஒய்சளர், துளுவர் முதலிய அரசர்களின் பெயர்கள் மல்கியிருக்கின்றன. சிவஞான போதம் என்னும் சைவசித்தாந்தத் தலைமணி நூலை அருளிய திருவெண்ணெய் நல்லூர்-மெய்கண்ட தேவர் இந்தக் கோயிலில் நிறுவிய படிமத்திற்கு நிலம் விடப்பட்டிருப்பதை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இது மூன்றும் இராஜராஜசோழன் (கி. பி. (1216-1248) காலத்துக் கல்வெட்டு. மெய்கண்டார் கால ஆராய்ச்சி செய்பவர்க்கு இது பயன்படும்.

தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையு மாட்கொள்வர்
ஆடிப் பாடியண் ணுமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே.

—திருநாவுக்கரசர்.

***

சென்னையில் திருவெம்பாவை

ஸ்ரீ சென்னை மல்லீஸ்வரர் ஸ்ரீ சென்னை கேசவப் பெருமாள் தேவஸ்தானத்தில் இவ்வாண்டு மார்கழித் திங்கள் முதல்நாள் தொடங்கிப் பிரதி தினமும் மாலை 6-30 மணி முதல் 7-30 மணிவரை கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் "திருவெம்பாவை திருப்பள்ளி யெழுச்சி"க்கு விரிவுரை இயற்றினர்கள். அதன் பூர்த்தி விழா பொங்கல் புதுநாளன்று அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் கனம். M. பக்தவத்சலம் B.A., B.L., அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

குலசேகராழ்வார்

இன்னமுதம் ஊட்டுகேன் இங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள்—பொன்னின்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் எங்கள்
குலசே கரனென்றே கூறு.
ஆரங் கெடப்பரன் அன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கெடக்குடப் பாம்பிற்கை இட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே.

—மணக்கால் நம்பிகள்.

'வேழம் உடைத்து மலைநாடு' என்ற புகழ் படைத்தது சேர நாடு. அந்நாட்டின் தலைநகரம் கொல்லி நகர், வஞ்சிக்களம் என்றும் கூறுவர். அந்நாட்டை முறை தவறாது அரசாண்டு வந்தனர் சேரமன்னர். அவர்களில் ஒருவன் திடவிரதன் என்பான். பலகாலம் மக்கட் பேறின்றித் தவங்கிடந்தான். கலியாப்தம் 28-ஆம் ஆண்டில், பராபவஆண்டு மாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் அவனுக்கு ஆண் திருமகவு ஒன்று திருவவதாரம் செய்தது. அதற்குக் குலசேகரர் என்ற திருப்பெயரிட்டனர். மயர்வற மதிநலம் அருளப்பெற்ற அக் குழந்தை வளர்ந்து பல கலைகளையும் கற்றுத் தேர்ந்து திகழ்ந்தது. உரிய காலத்தில் இளவரசுப் பட்டம் கட்டப் பெற்றார். பாண்டிய மன்னன் தன் மகளை இவருக்கு மணம் செய்து கொடுத்தனன். குலசேகரர் தம் தந்தைக்குப் பின் அரசுரிமை ஏற்றனர். சோழ, பாண்டியர்களை வென்று, மூன்று நாடுகளுக்கும் முடியுடைப் பெருவேந்தராய் ஆட்சி செய்து மாட்சியின் விளங்கினார்.

செங்கோல் செலுத்திவரினும் அரச போகத்தில் அவர் மனம் ஈடுபடவில்லை; தாமரையிலையில் தண்ணீர் போல் இருந்து வந்தது. திருமாமகள்காதனிடத்தும், அவன் அடியார்களிடத்தும் ஆர்வமிக்க உள்ளத்தவரானார்; தொண்டர்கள் பலரை அழைத்து அவர்களை அன்புடன் ஏத்தி வாழ்த்தி வணங்கி வருவாரானார். இராம காதை கேட்க விரும்பினார். பெரியார் ஒருவர் இராமாயணம் சொல்ல, குலசேகரர் கேட்டு வரலானார். கதையில், கரன், தூடணன், திரிசிரன் இவர்களுடன் இராமன் போர் செய்ததைப் பற்றிக் கூறப்பட்டது. ஆயிரக்கணக்கான அரக்கர்களுடன் இராமன் தாமொருவராகத் தனி நின்று சண்டையிட்டார் என்று சொன்னார் கதை சொல்பவர். குலசேகரர் மனம் முழுவதும் இராம சரிதையில் ஆழ்ந்துவிட்ட படியால், போர் அப்பொழுது நிகழ்வதாகவே எண்ணி விட்டார். தனியாகப் பேர் புரியும் இராமனுக்குத் துணையாகப் போகவேண்டுமென்று நினைத்தார்; படைத் தலைவர்களை நால் வகைப் படைகளையும் திரட்டிக் கொண்டு வருமாறு பணித்தார். அமைச்சர், அரசர் மனநிலையை யறிந்தனர். இராமாயணம் சொல்லும் அவரைக் கொண்டே, 'இராம

பிரான் கரதூடண திரிசிராதிகளை யெல்லாம் அழித்து வெற்றியுடன் மீண்டார்' என்று சொல்லும்படி செய்தார்கள். அதைக் கேட்ட குலசேகரர் மனத் தெளிவு அடைந்து தம் பரவச நிலையை உணர்ந்து கொண்டார்.

அமைச்சர்கள் அரசருடைய மனக்கலக்கத்திற்கு வைணவர்கள் கூட்டுறவுதான் காரணம் ஆதலின் அதை யொழிக்க வழிதேடினார்கள். அரசர் பூசைக்குப் பயன் படுத்தும் நவமணிமாலை யொன்றை எடுத்து மறைத்து வைத்துவிட்டு வைணவர்கள் திருடியிருக்க வேண்டும் என்று அவர்கள்மேல் பழியைச் சுமத்தினார்கள். குலசேகரர், "எங்தையடியார் எடுத்திரார்; அதை நீங்கள் உணரும்படி செய்கிறேன்; குடத்தில் ஒரு நல்ல பாம்பை இட்டுக் கொண்டு வாருங்கள்" என்றார். அமைச்சர்கள் அப்படியே செய்தார்கள். மன்னர், "எம்பெருமான் தொண்டர் மணிமாலையை எடுத்திரார் என்று நான் சொன்னது உண்மையாயின் இப் பாம்பு என்னைத் தீண்டாது" என்று சொல்லிக் குடத்திற்குள் கையை விட்டார். பாம்பு ஒன்றும் செய்யாது அடங்கியிருந்தது. அமைச்சர்கள் பயந்து, தாங்கள் செய்த தவறை அரசருக்குச் சொல்லி, மணிமாலையைக் கொணர்ந்து வைத்துவிட்டு மன்னிக்கும்படி விண்ணப்பித்தார்கள். அரசர், "உலக வாழ்க்கையை மெய்யென்று எண்ணி இறைவன் திருவடிகளில் என் மனம் பற்றுமல் செய்ய நீங்கள் முயல்கிறீர்கள்; இவ்வரச போகம் எனக்கு வேண்டாம்; என் மைந்தனுக்கு முடி சூட்ட ஏற்பாடு செய்யுங்கள்" என்று அமைச்சர்களிடம் கூறினார். அவர்களும் அப்படியே செய்தார்கள். பின்னர் குலசேகரர், திருவரங்கம், திருக்கண்ணபுரம், வித்துவக்கோடு, திருவேங்கடம், தில்லைநகர்த் திருச்சித்திர கூடம் முதலிய திவ்விய தேசங்களைப் பற்றி திருப்பாசுரங்களைப் பாடி உலகத்தை வாழ்வித்தருளினார்கள்.

குலசேகர ஆழ்வார் அவதாரம் செய்த ஊர் திருவஞ்சிக்களம் என்று "எண்டிசையும் ஏத்தும் குலசேகரனூர் என உரைப்பர் வாய்த்த திருவஞ்சிக்களம்" என்ற பாடல் கூறுகிறது. திருவஞ்சைக்களம், என்றும் கூறுவர்; அவருடைய பாடல்களில், 'கொல்லிகாவலன்', 'கொல்லி நகர்க்கிறை' என்று சொல்லிக் கொள்கிறார். இதை வைத்து 'கொல்லம்' என்ற ஊராக இருக்கலாம் என ஒரு சிலர் கருதுகின்றனர். வைணவ சம்பிரதாய நூல்களில் இவருடைய அவதாரம் கலி **28**-ஆம் ஆண்டு (அதாவது கி. மு. **3075**) என்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீரங்கத்தைப் பற்றிய 'கோயிலொழுகு' என்ற நூலில் குலசேகரப் பெருமாள் கலியாப்தம் **50** ஆண்டுக்குமேல் சேரசோழ பாண்டிய மண்டலங்களுக்குப் பிரபுவாய்த் தமது புத்திரி சோழவல்லியை அழகிய மணவாளப் பெருமாளுக்குத் திருமணம் செய்வித்துத் தமது சொத்தை ஸ்ரீதனமாகக் கொடுத்து மூன்றும் ஆவரணத்தின் தென்மேற்கில் சேனை வென்றான் திருமண்டபம் கட்டிய செய்தி கூறப்படுகிறது. கூடல்நாயகன், கோழிக்கோன், கொங்கர்கோன் என்று தம்மைச் சொல்லிக் கொள்வதால் பாண்டிய, சோழ, கொங்கு நாடுகள் இவர் ஆட்சிக்குட்பட்டிருந்த தென்பர். ஆராய்ச்சியாளர்கள் இவ்வாழ்வார் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று எண்ணுகின்றனர். இவர் பெரிய பெருமாளாகிய இராமபிரானிடத்திற் பேரன்பு உடையவர். ஆதலின் இவரை 'குலசேகரப் பெருமாள்' என்று கூறலாயினர். இவர் அருளிய பதிகங்களின் தொகைக்கு 'பெருமாள் திருமொழி' என்ற பெயரிட்டனர். இவர் பாடி அருளிய பதிகங்கள் பத்து; பாசுரங்கள் நூற்றைந்து. இவர் இராமனைப் பற்றிப் பாடியிருப்பவை உள்ளம் உருக்குபவை; கற்றார் மனதைக் கவர்பவை. முதல் பத்தில் திருவரங்கத்தமுதனைக் கண் கொண்டு

என்று களிப்பது, வாயார எப்போது வாழ்த்துவது, மலர் தூவி கை யென்று கூப்புவது, சென்னி எஞ்ஞான்று வணங்குவது, உள்ளம் உருகுவது, கண்ணீர் மல்குவது என்று பாடியிருக்கின்றனர். இரண்டாம் பத்தில், திருவரங்கனின் திருத்தொண்டர்களின் சேவடிகளை வாழ்த்துகின்றார். மூன்றும் பத்தில், உலக வாழ்க்கை மெய்யென்றெண்ணும் மையல் நீர்த்தாட்கொள்ள வேண்டுமென்று வேண்டுகின்றார். நான்காம் பத்தில், திருவேங்கமுடையானைப் பாடுங்கால் 'வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்' என்று கூறுகிறார். வேங்கடத்துக் கோனேரியில் கொக்காகப் பிறப்பேனே, சுனையில் மீனாய்ப் பிறப்பேனே, தம்பகமாய் நிற்பேனே, படியாய்க் கிடந்து பவளவாய் காண்பேனே என்றெல்லாம் திருமலையில் எழுந்தருளிய பெருமானிடம் தமக்குள்ள ஆராக் காதலை அறிவிக்கின்றார். 'எம்பெருமான் பொன் மலைமேல் ஏதேனும் ஆவேனே' என்று ஏதாவது ஒரு பொருளாய் இருந்தால் கூடப் போதும் என்பது அவருடைய மனநிலையை விளக்குகின்றது. ஐந்தாம் பத்தில் வித்துவக்கோட்டம்மானைப் பாடுகின்றார். தாய் நினைந்தழும் குழவி, கொண்டான் குறிப்பறியும் குலமகள், கோல் நோக்கி வாழும்குடி, வாளால் அறுத்த மருத்துவன் பால் மாளாத காதலுள்ள நோயாளன், வான்மறந்த போதும் மேகத்தை எதிர்பார்த்திருக்கும் பயிர்கள், பரந்தோடும் ஆறுகள் எல்லாம் கடலில் புகுவது, 'நின்னையேதான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் தன்னையேதான் வேண்டும் செல்வம்போல' என்று அவருடைய பாடல்களில் பயின்றுள்ளவை சுவைத்தின்புறத்தக்கவை. ஆறும் பத்தில், யமுனைத்துறைவனான கண்ணனின் திருவிளையாடல்களைப் புகழ்ந்து பாடுகிறார். ஒரு பாசுரத்தில் "தாய்முலைப் பாலில் அமுதிருக்கத் தவழ்ந்துதளர் நடையிட்டுச் சென்று, பேய்முலைவாய் வைத்து நஞ்சையுண்டு பித்தனென்றே பிறர் ஏச நின்றாய்" என்று கூறும் பகுதி மிக அழகுடையது. ஏழாம்பத்தில், கண்ணன் வளரும் காட்சியை அனுபவிக்கப் பெறும் பேறுபெற்ற யசோதையைப் போல் தான் பயன்பெற வில்லையே என்று பெற்ற தாயான தேவகி புலம்புவதாக உள்ள பாசுரங்கள் இரும்பு மனதையும் உருக்கவல்லன. எட்டாம் பத்தில், திருக்கண்ணபுரத்து இறைவனைப் பாடுமுகத்தால் தசரதன் மைந்தன் காகுத்தனைத் தாலாட்டும் முறையில் அமைத்துள்ள பாசுரங்கள் உள்ளன. ஒன்பதாம் பத்து, தனயன் கான்புகத் தசரதன் புலம்பும் பான்மையிலுள்ள பாடல்களைக் கொண்டுள்ளது; ஆழ்வார் தசரதனேயாகி விடும் தன்மையை யுடையது; பாசுரங்கள் கருங்கல் மனத்தையும் கரைந்துருகச் செய்பவை. 'மெல்லணைமேல் முன்துயின்றாய் இன்றினிப் போய் வியன் கான மரத்தின் நீழல் கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ, காகுத்தா கரியகோவே' என்று ஒரு பாசுரத்தில் கூறுகிறார். பத்தாம் பத்து, தில்லைநகர்த் திருச்சித்திர கூடத்தைப் பற்றியது; இராம காதையையே அதனுள் அடக்கியுள்ளது. 'தில்லைநகர்த் திருச்சித்ரகூடந் தன்னுள் அந்தணர்களொரு மூவாயிரவர் ஏத்த அணிமணி ஆசனத்திருந்த அம்மான்' என்று தில்லை மூவாயிரவரைக் குறிப்பிட்டிருக்கிறார். குலசேகரர் வடமொழியில் முகுந்த மாலை என்ற நூலையும் செய்தருளியுள்ளார்.

திருப்பணித் துவக்க விழா

தஞ்சை மாவட்டம், கோயிலூர், ஸ்ரீ மந்திரபுரீஸ்வரஸ்வாமி தேவாலயத் திருப்பணித் துவக்க விழா நடைபெற்றது. அதுபோது சென்னை மாநில அறநிலைய இலாகா அமைச்சர் திரு. M. பக்தவத்சலம், B.A., B.L., அவர்கள் திருப்பணியைத் துவக்கி வைத்தார்கள். நெடும்பலம், திரு. N. S. இராமலிங்கம் M.L.A., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்கள்.

வானமாமலை

நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்
ஆகிலும் இனி உன்னை விட்டொன்றும்
ஆற்றகிற் கின்றிலேன் அரவினணை யம்மானே
சேற்றுத் தாமரை செந்நெலூடுமலர் சிரீவரமங்கல நகர்
வீற்றிருந்த எந்தாய் உனக்கு மிகையல்லே னங்கே

—நம்மாழ்வார்.

ஆழ்வார்களால் பாடப்பெற்ற வைணவத் தலங்கள் நூற்றெட்டினுள் ஒன்று வானமாமலை. இத்திருப்பதி திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குனேரி என்னும் நகர்தான்; திருநெல்வேலியி லிருந்து நாகர்கோயிலுக்குப் போகும் பெரும் பாதையில் பதினெட்டு கல் தொலைவில் உள்ளது. இதற்கு, தோதாத்ரி, அம்பராத்ரி, வியோம மகாத்ரி, வல்லிமங்காபுரம், வல்லிபுரம், ரோமச க்ஷேத்திரம், சிரீவரமங்கலநகர், சிரீவரமங்கை என்ற பல பெயர்களுண்டு. தோதாத்ரி என்றால் பாவம் போக்கும் மலை என்று பொருள். அம்ப ராத்ரி, வியோமமகாத்ரி என்பவை தமிழில் வான மாமலை யெனப்பட்டது. நம்மாழ்வார் திருவாய் மொழியில் முதல் ஏழு பாசுரங்களில் சிரீவரமங் கலநகர் என்றும், பின் நான்கு பாடல்களில்

சிரீவரமங்கை என்றும் அருளியிருக்கின்றூர். ஆறுவது பாசுரத்தில் "வானமாமலேயே அடியேன் தொழ வந்தருளே" என்று கூறியிருக்கின்றூர். சேரமன்னர் வானவன் என்ற பட்டப்பெயர் கொண்டிருந்தனர்; பாண்டிய அரசரும் அப்பெயரை வைத்துக்கொண்டதாகத் தெரிகிறது. இப்பகுதி வானவன்நாடு என்று கூறப்படுவதால் வானவன்மாமலே என்று இத்தலத்திற்குப் பெயர் உண்டாயிற்றென்றும் கூறுவர். ரோமச முனிவர் இங்கு பூசித்ததால் ரோமச க்ஷேத்திரம் என்ற பெயருண்டாயிற்றென்று தலபுராணத்தால் தெரிகிறது.

விஷ்ணுத் தலங்களிலுள்ள அர்ச்சாமூர்த்திகள் ஸ்வயம்வ்யக்தம், திவ்யம், ஸைத்தம், மானுஷம் என்று நான்கு வகைப்படும். ஸ்வயம்வ்யக்த மூர்த்தியே மிகச் சிறந்ததென்பர். அது ஒருவராலும் நிர்மாணம் செய்யப்படாது பகவான்தானே அர்ச்சாமூர்த்தியாய் அவதாரம் செய்வது. திருவரங்கம், திருவேங்கடம், நைமிசாரண்யம், புஷ்கரம், சாளக்கிராமம், பதரிகாச்ரமம், ஸ்ரீமுஷ்ணம், தோதாத்ரி என்ற எட்டும் ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திரங்கள். இந்த எட்டினுள் ஒன்ருக இருக்கும் பெருமையுடையது வானமாமலே என்னும் திவ்விய தேசம்.

மாஞ்சோலேக்குள் இருந்த குளத்தின் நடுவில் எழுந்த மலேயின்மேல் தானே கோயிலாய்த் தோன்றியதென்பர். கர்ப்பக்கிரகத்தின் மேல்புறம் மலே இருக்கிறது. மலேயை யொட்டியே மண்டபமும் மதில்களும் எழுந்துள்ளன. இறைவன் திருநாமம் தோதாத்ரிநாதன் என்பது. இவர் வீராசனத்தில் வீற்றிருக்கின்றூர்: இருமருங்கும் நிலமகளும் திருமகளும் அமர்ந்திருக்கின்றனர்; சூரிய சந்திரர்கள் நிற்கின்றனர்; ஊர்வசி, திலோத்தமை சாமரை வீசுகின்றனர்; பிருகு, மார்க்கண்டேய முனிவர்கள் கைகூப்பித் தொழுகின்றனர்; கருடாழ்வானும், சேனே முதலியாரும் சற்று தூரத்தேயிருக்கின்றனர். இந்த பதினெரு திருவுருவங்களும் மலேயின் ஒரே சிலேயில் அமைந்திருப்பது இக்கோயிலுக்கே தனிச் சிறப்புடையது.

பொன் வேய்ந்த மண்டபத்தின் மேடைமீது உத்ஸவமூர்த்தி உபயநாச்சியார்களுடன் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியிருக்கிறூர். நம்மாழ்வார் கடைசி பாசுரத்தில் கூறியிருக்கும் 'தெய்வநாயகன்' என்பது இம்மூர்த்தியையே குறிக்கும் என்பர். இவரது வலப்புரத்தில் சீவரமங்கை நாச்சியார் அமர்ந்த திருக்கோலத்துடனும், இடதுபுறம் ஆண்டாள் நின்ற திருக்கோலத்திலும் காட்சியளிக்கின்றனர். இம்மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் விமானம் 'வைகுண்ட விமானம்' என்பர். சீவரமங்கை நாச்சியார் திருவுருவத்தை வானமாமலே மடத்தின் முதலாவது ஜீயர் சுவாமிகளால் திருவேங்கடத்திலிருந்து கொண்டு வந்து எழுந்தருளச் செய்யப்பெற்றதென்று வரலாறு வழங்குகின்றது.

பிரகாரத்தில் முப்பத்திரண்டு முனிவர்கள் ரிஷிபத்தினிகள், வைகானச முனிவர், விநாயகர் இவர்களின் சிலேகள் உள்ளன. ஒரு சிறு மண்டபத்தில் சீதாராமர் எழுந்தருளியிருக்கின்றனர். குலசேகரமண்டபம் என்ற மற்ருெரு அழகிய மண்டபமும் உள்ளது. சேரமன்னர் குலசேகரர் என்பவரால் கட்டப்பட்டதென்பர். இம்மண்டபத்தின் தென்புறம் ஒரு கம்பத்தில் இலட்சுமிநரசிம்மர் திருவுருவமும், மற்ருெரு தூணில் நடராஜமூர்த்தியின் திருவுருவமும் அற்புத சிற்ப வேலேப்பாட்டுடன் திகழ்கின்றன.

உட்பிரகாரம் மேல்புறம் திருமதிலில் பல அழகிய சிற்பக் காட்சிகளேக் காணலாம். அன்பர் புடைசூழ விநாயகர் இசைக்கருவிகளுடன் வீற்றிருக்கும் இசையரங்கு, பராசக்தியின் காட்சி, இலட்சுமிநாராயணன், நாட்டிய மகளிர், நடராஜர் திருநடனம், ஆனிறைகளுடன் வேணுகோபாலன், கருடன் நடனத்திற்கு அனுமன் முழவம் முழக்குவது, ஆடவர் பெண்டிர் நடனம், வாமன அவதாரம், தோதாத்ரிநாதன், தேவியின் திருக்கோலம், முருகன் மான்வேட்டை, நாகாபரணம் பூண்ட சிவபெருமான், இறைவன் சிங்கவாகனத்தில் வரும் காட்சி, விநாயகர் நடனம் இந்தச் சிற்பங்களெல்லாம் கண்டின்புறத் தக்கவை.

கர்ப்பக்கிரகத்துக்கு வெளியே வடக்கு நாச்சியார், தெற்கு நாச்சியார் சந்நிதிகள் தனித் தனியேயுள்ளன. இராமபிரான், ஆழ்வார்கள், எம்பெருமானூர், கூரத்தாழ்வான், பிள்ளே லோகாசார்யஜீயர் இவர்களின் சந்நிதிகளும் இருக்கின்றன. முழுப்பிரகாரமும் சுற்றிவரத் தக்க சீவலிமண்டபம் இக்கோயிலில் பெரிய மண்டபமாம். இதை ஸ்ரீ பட்டபிரான் வானமாமலே இராமாநுஜ ஜீயர்சுவாமிகள் கட்டினூர். அவர் திருவுருவம் இம் மண்டபத்தில் இருக்கிறது. இம்மண்டபப் பிரகாரத் தூண்களில் நரசிங்க மூர்த்தி, இராமர் வில்வளேப்பது, கண்ணன் திருவிளேயாடல்கள் முதலிய சிற்பங்கள் இருக்

கின்றன. சிவலிமண்டபம் கடந்துவந்ததும் காணப்படுவது வீரப்பநாயக்கன் மண்டபம். ஒவ்வொரு தூணிலும் அழகிய சிற்பங்கள் அமைந்துள்ளன. மதுரை அரசர் வீரப்பநாயக்கர் கட்டியது. இம்மண்டபத்தையடுத்து உருக்குமினி சத்தியபாமையுடன் வேணுகோபாலன், மணவாளமா முனிகள், தசாவதாரம் முதலிய சந்நிதிகள் இருக்கின்றன. கொடிமரத்திற்கும் கோபுர வாயிலுக்கும் இடையே செவ்வந்தி மண்டபம் என்ற ஒன்றிருக்கிறது.

வானமாமலைக் கோயில் திருப்பணி ரோமச முனிவரால் தொடங்கப்பட்டது என்பது புராண வரலாறு. மலையைக் குடைந்தமைத்த குடைவரைக் கோயில் கர்ப்பக்கிரகத்தில் உள்ளது. அதனையடுத்து செதுக்கிய கற்களால் அமைந்த திருப்பணி. இது கி. பி. ஏழாம் நூற்றுண்டுக்கு முற்பட்டதென்பர். நம்மாழ்வார் கி.பி. எட்டாம் நூற்றுண்டினர் என்றும் அதற்கு முன்பே இக்கோயில் இருந்திருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். கற்பாறைக் குடை கோயில்கள் பல்லவர் காலத்தவையாதலின் இக்கோயில் மிகப் பழமையானது என்பதற்கையமில்லை. சேர மன்னர் குலசேகரப் பெருமாள் என்பவர் கோயிலின் ஆட்சிப் பொறுப்பை புஷ்பாஞ்சலி சந்நியாசி என்பவரிடம் ஒப்படைத்திருந்தார். கி.பி. 1444-ல் மணவாள மாமுனிகளின் முதல் மாணவரான சுந்தரவரதர் என்பவரிடம் ஒப்புவித்தார். அவரே வானமாமலை மடத்தின் முதல் தலைவரான இராமானுஜ ஜீயர் சுவாமிகள். அவர்கள் முதல் பரம்பரையாக வந்த ஜீயர் சுவாமிகள் அனைவரும் இக் கோயிலுக்கு அளவிறந்த திருப்பணிகளைச் செய்துள்ளார்கள். மண்டபங்கள், கோபுரங்கள், திருமதில்கள், சேற்றுத்தாமரைத் தீர்த்த கற்கட்டிடம், பல சந்நிதிகள் இவைகளை யமைத்தார்கள். பல விலையுயர்ந்த திருவாபரணங்களையும், பல வாகனங்களையும், திருத்தேர் முதலியனவும் செய்துவைத்தார்கள்.

இத்தலத்தின் தீர்த்தம் சேற்றுத்தாமரைத் தீர்த்தம் என்பது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் "சேற்றுத்தாமரை செந்நெலூடு மலர் சீரிவர மங்கலநகர்" என்று கூறியிருக்கிறார். இக்கோயிலில் எல்லாமாதங்களிலும் திருவிழாக்கள் நடைபெறும். பங்குனித் திருநாளும், சித்திரைத் திருநாளும் மிகச்சிறந்தவை. மாமரமே இந்த தலத்திற்கு விருட்சம். புராணத்தில் ஓரிடத்தில் இலந்தை மரமும் கூறப்படுகிறது.

இந்த கோயிலுக்குப் பெருமை தருவது இங்குள்ள **எண்ணெய்க்கிணறு**. நாள்தோறும் எம்பெருமானுக்கு குறைந்தது நாலுபடி எண்ணெய்த் திருமஞ்சனம் செய்யப்படும். அத்துடன் இளநீர், பால், பழச்சாறு, சந்தனாதித்தைலம் முதலியவைகளும் உபயோகிக்கப்படும். சிறப்பு நாட்களில் 112 படி எண்ணெயும் அபிஷேகம் செய்வதுண்டு. இவ்வாறு செய்யப்படுபவை யெல்லாம் ஒன்று சேர்ந்து கால்வழியே எண்ணெய்க்கிணறு போய்ச்சேரும். அக்கிணறு வெயில், மழை,காற்றுபடும்படி திறந்தேயிருக்கிறது. அதுமுப்பது அடி ஆழம், முப்பது அடி நீளம், இருபது அடி அகலம் இருக்கிறது. பதினைந்து அடி ஆழத்திற்கு எண்ணெய் இருந்துகொண்டேயிருக்கும். எண்ணெய் சிவப்பு நிறமாக இருக்கும். இவ்வெண்ணெயைப் பயன்படுத்துவதால் குட்டநோய் முதலிய கொடிய நோய்களும் தீர்கின்றன. பல நூற்றுண்டுகளாக இக்கோயிலில் இது இருந்து வருகிறது. அகத்தியர் இயற்றியதாகக் கூறப்படும் பரிபூரண நானூறு என்ற சித்தவைத்திய நூலில் கரும வியாதிகளைக் குறிக்கும் அதிகாரத்தில் தீராத குட்டநோய்க்கு வானமாமலைக் கோயிலிலுள்ள கிணற்றின் எண்ணெய் கைகண்ட அருமருந்து என்று கூறப்பட்டிருக்கிறது.

வானமாமலைத் திருப்பதியைப்பற்றி வடமொழியில் பிரமாண்ட புராணம், ஸ்கந்தபுராணம், பிரகந்நாரசிம்ம புராணம் என்பவைகளில் பேசப்படுகிறது. இவைகளைத் திரட்டிவடமொழியில் ஒருநூல் வெளி வந்திருக்கிறது. அண்மையில் 'வானமாமலை மான்மியம்' என்று தமிழிலும் இது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் பதினொரு பாசுரங்களை அருளியுள்ளார். தெய்வநாயகன் சந்திரகலா, மாலை, தெய்வநாயகன் ஊசல், வரமங்கை ஊசல் திருவாய் மொழிநூற்றந்தாதிச் செய்யுள், திருவோலக்கத்துதி முதலியனவும் இப்பதியைப் பற்றியனவே.

"வானோர் முதலா மரம் அளவா எப்பிறப்பும்
ஆனேற்கு அவதியிடல் ஆகாதோ—தேன் ஏயும்
பூவர மங்கை புவிமங்கை நாயகனே
சீவரமங்கை அரைசே"

—நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி.

திருஎவ்வுளூர்

பாலனுகி ஞாலமேழுண்டு பண்டாலிலை மேல்
சாலநாளும் பள்ளி கொள்ளும் தாமரைக்
கண்ணன் எண்ணில்
நீலமார் வண்டுண்டு வாழும் நெய்தலந்தண் கழனி
ஏலநாறும் பைம்புறவி லெவ்வுள் கிடந்தானே.

—திருமங்கையாழ்வார்

தொண்டை நாட்டில் ஆழ்வார்களால் பாடப்பெற்ற பதிகள் இருபத்திரண்டு உள்ளன. இதை, ''ஆறேடு ஈரெட்டுத் தொண்டை'' என்ற பாடற் பகுதி அறிவிக்கும். இந்த திவ்விய தேசம் இப்போது திருவள்ளூர் என வழங்குகிறது. இது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ளது; திருவள்ளூர் இரயில் நிலையத்திலிருந்து இரண்டு கல் தொலைவிலுள்ளது. வடமொழியில் 'கிங்க்ருஹ க்ஷேத்திரம்', 'புண்யாவர்த்த க்ஷேத்திரம்', 'வீக்ஷாரண்ய க்ஷேத்திரம்' என்றும் இதன் திருநாமங்கள் கூறப்படுகிறது. திருமங்கை யாழ்வார் பாசுரங்களில் எவ்வுள் என்றே குறிக்கிறார். ஸ்வயம்வ்யக்தம், திவ்யம், ஸைத்தம், மானுஷம் என்று சொல்லப்பட்ட நான்குவிதமான விஷ்ணுத் தலங்கள் நூற்றெட்டினுள் ஸைத்தம் அல்லது ஆர்ஷம் என்று சொல்லப்பட்ட புண்யாவர்த்த க்ஷேத்திரம் இத்திரு எவ்வுளூர் என்பர்.

இங்கெழுந்தருளியுள்ள எம்பெருமான் திருநாமம் வீரராகவப் பெருமாள். 'எவ்வுள் கிடந்தான்' என்று தமது பாசுரங்களில் திருமங்கை மன்னன் அருளியிருக்கின்றார். தாயார் திருநாமம் வசுமதி நாச்சியார் அல்லது கனகவல்லித் தாயார் என்பது. பெருமாள் நாகத் தணைமிசை கிடந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். இதை புஜங்க சயனம் என்பர். இங்கு சாலி கோத்திர முனிவருக்குப் பிரத்தியட்சம். எம்பெருமான் இந்த முனிவரை ''சயனிப்பதற்கு எவ்வுள்'' என்று வினவியதால் தலத்திற்கு இப் பெயர் ஏற்பட்டதென்பர். இறைவன் எழுந்தருளியுள்ள விமானத்தை விஜய கோடி விமானம் என்பர்.

இப்பகுதியிலுள்ள தீர்த்தம் மிகவும் பிரசித்து பெற்றது. 'ஹ்ருத்தாப நாசினீ' என்பர். ஹ்ருத்—மனத்திலுள்ள, தாப—தாபங்களை, நாசினீ—போக்கடிக்க வல்லது என்று பொருள். 'ஹ்ருத் பாபநாசினீ' அதாவது மனதால் நினைந்த பாவங்களைப் போக்க வல்லது என்றும் கூறுவர். மாதந்தோறும் அமாவாசையன்று மக்கள் திரளாக இந்த தீர்த்தத்தில் மூழ்கி எம்பெருமானைச் சேவித்துச் செல்கின்றனர். இதில் தை அமாவாசை மிகவும் சிறப்பானது. எல்லா மாதங்களிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இந்த திவ்விய தேசத்தை திருமழிசை யாழ்வார், திருமங்கை யாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார்கள். திருமழிசை யாழ்வார்,

நாகத்தணைக் குடந்தை வெஃகா திருவெவ்வுள்
நாகத்தணையரங்கம் பேரன்பில்—நாகத்
தணைப்பாற்கடல் கிடக்கு மாதி நெடுமால்
அணைப்பார் கருத்தனுவான்.

என்று நான்முகன் திருவந்தாதியில் 36-ஆம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். திருமங்கை யாழ்வார் இத்தலத்திற்கு பெரிய திருமொழி இரண்டாம் பத்தில் பத்து பாசுரங்களையருளியுள்ளார். அவைகளில் இராமவதாரத்தின் மகிமை, கண்ணன் திருவிளையாடல்களின் பெருமை இவைகளைப் புகழ்ந்து பேசுகிறார். 'எந்தை தந்தை தம்பெருமான் எவ்வுள் கிடந்தானே' என்றும், 'எங்கள் அப்பன் எம்பெருமான் எவ்வுள் கிடந்தானே' என்றும் இறைவனை இனிமையாக அழைக்கின்றார். மேலும் அவரே பெரிய திருமடலில் 'என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெருமலையை' என்றுமிக்க ஆராமையோடு கூறுகின்றார். ஸ்ரீநிகமாந்த மகாதேசிகன், 'கிங்க்ரஹேசஸ்துதி' என்கிற ஸ்தோத்தி

ரத்தை எப்பெருமான் மீது பாடியருளியுள்ளார். திவ்வியகவி பிள்ளைப்பெருமாளையங்கார்,

நீர்மை கெட வைதாரும்
நின்னோடு எதிர்ந்தாரும்
சீர்மை பெற நின்அடிக்
கீழ்ச்சேர்க்கையினுல்—நேர்மைஇலா
வெவ் வுளத்தனேன் செய்
மிகையைப் பொறுத்தருளி
எவ் வுள் அத்தனே
நீ இரங்கு.

என்று நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில் பாடியுள்ளார்.

அகோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கரான முதல் பட்டம் ஆதிவண் சடகோப யதீந்த்ர மகாதேசிகனுல் ஹ்ருத்தாப நாசினீ தீர்த்தத்தின் நான்குபுறத்திலுமுள்ள படிக்கட்டுகள் நன்கு கட்டப்பட்டன. அவ்வாதீன பரம்பரையில் பின்பு வந்த அழகிய சிங்கர்களாலும் பல திருப்பணிகளும், பல திருவாபரணங்களும் செய்யப்பட்டன. அந்த மடத்தின் தலைவர்களாலேயே இவ்வாலயத்தின் ஆட்சி நடைபெற்று வருகிறது.

இக்கோயிலில் சில கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. குலோத்துங்க சோழ தேவன் ஆட்சிக் காலத்தில் திருவேங்கட தேவன் என்பான் வீரராகவப் பெருமாள் கோயிலில் மகர சங்க்ரமண விழாவுக்காக நிலதானம் செய்ததை ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. சக 1552-ல் (அகோபில மடத்து 13-வது தலைவர்) ஸ்ரீ வீரராகவ சடகோபஜீயர் சுவாமிகள் 133 பொன் வட்டிக்குக் கொடுத்து அந்த வருமானத்தைக் கொண்டு கோயிலில் ஒரு விழா நடத்த ஏற்பாடு செய்ததை மற்ெறாரு கல்வெட்டு அறிவிக்கிறது. அழகப்ப செட்டி என்பவர் கோயிலுக்கு நிலமளித்து சக 1542-ல் கோயிலில் ஒரு மண்டபம் எழுப்பியதை வேறொரு கல்வெட்டு குறிக்கிறது. இன்னும் விஜயநகர மன்னர்களான வீர வெங்கட ராயர், சதாசிவராயர், இராமதேவ மகா ராயர் முதலியோர் காலத்திய கல்வெட்டுக்களில் கோயிலுக்கு நிலதானம், கிராம தானம் முதலியவை செய்யப்பட்டதைத் தெரிவிக்கின்றன. இன்னும் சில சிதைந்து போன கல்வெட்டுக்களும் உள்ளன.

பந்திருக்கும் மெல்விரலாள் பாவை பனிமலராள்
வந்திருக்கும் மார்வன் நீலமேனி மணிவண்ணன்
அந்தரத்தில் வாழும் வானோர் நாயகனுயமைந்த
இந்திரற்கும் தம்பெருமா னெவ்வுள் கிடந்தானே

—திருமங்கையாழ்வார்

சென்னையில் பன்னிரு திருமுறைப் பிரதிஷ்டை

திருவல்லிக்கேணி பெரியதெரு ஸ்ரீஅரசடிக் கற்பக விநாயகர் ஆலயத்தில் பிரதி தினமும் மார்கழித் திங்கள் முழுவதும் காலை 6-30 மணி முதல் 7-30 மணி வரை கயப்பாக்கம்.- சோமசுந்தரம் செட்டியாரவர்கள் "திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி"க்கு விரிவுரை யாற்றி வந்தார்கள். அதன் பூர்த்தி விழா 8—1—59 அன்று அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர் திரு. A. உத்தண்டராம பிள்ளை அவர்கள் I. A. S. தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. அன்று அவ்வாலயத்தில் "பன்னிரு திருமுறைக் கோயில்" ஒன்றும் பிரதிஷ்டை செய்யப் பெற்றது. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவர் திரு. V. இரத்தின முதலியார் B.A., B.L., அவர்கள் சிறப்புரை வழங்கினுர்கள். ராவ்சாஹிப் நல். முருகேச முதலியார் B.A., அவர்கள் நன்றி கூறினுர்கள்.

திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர்.

திருச்செங்கோடு

வெந்தவெண் நீறணிந்து விரிநூல்
திகழ்மார்பின் நல்ல
பந்தண வும்விரலாள்
ஒருபாகம் அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவார்
அவலம் அறுப்பாரே.

—திருஞான சம்பந்தர்

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழில் செங்கோ
டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்தில
னேஅந்த நான்முகனே.

—அருணகிரிநாதர்



நாகப்பாறை

தேவாரப் பாடல் பெற்ற சிவத்தலங்களுடன் புகழ் பெற்ற முருகன் கோயில்களும் ஒருங்கே அமையப் பெற்றவை சில உள்ளன. திருப்பரங்குன்றம், திருச்சிக்கல், திருப்புள்ளிருக்கும் வேளூர் (வைத்தீசுவரன் கோயில்), திருவண்ணாமலைமுதலியவை அவ்வகையைச் சார்ந்தவை. திருச்செங்கோடும் அத்தன்மையதே; மாதொரு பாகனும், மால் மருகனும சேர்ந்து விளங்கும் மாட்சியுடையது. சேலம் மாவட்டத்தில் சங்கிரிதுர்க்கம் இரயில் நிலையத்திலிருந்து ஆறு கல் தொலைவிலுள்ளது இத் திருப்பதி. கொங்கு நாட்டில் பாடல் பெற்ற ஏழு தலங்களில் இதுஒன்று.

"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்" என்று இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்டதாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் இத் தலத்தை முருகன் கோயில் கொண்டுள்ள இடமாகக் குறிக்கப் பட்டிருக்கிறது. சங்க காலப் புலவரான செங்குன்றூர்க்கிழார் என்பவரின் பிறப்பிடம் இதுவாக இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்த திருஞானசம்பந்தர் இத் தலத்தைப் பற்றி ஒரு பதிகம் பாடியுள்ளார்: அதில் **கொடிமாடச் செங்குன்றூர்** என்ற பெயரே வருகிறது. புராணத்திலும் மற்றைய இலக்கியங்களிலும் தெய்வத் திருமலை, நாககிரி, நாகாசலம், நாகமலை, அரவகிரி, உரகவெற்பு, கட்செவிக்குன்றம், பணிமலை, தந்திகிரி, நகபூதரம், புசகபூதரம் என்ற பெயர்கள் பயிலப் பெறுகின்றன. செங்கோடு என்றால் சிவந்த மலை யென்று பொருள். கொடி மாடச் செங்குன்றூர் என்பது கொடிகளுள்ள மாளிகைகள் நிறைந்த சிவந்த மலையையுடைய ஊர் என்று பொருள் படும். கொடிமாடம் என்பதற்கு விழாக்களும் மாடங்களும் மல்கியதென்றும் பொருள் கூறுவர். தெய்வத் திருமலை என்பது அருணகிரி நாதர் கந்தர் அலங்காரத்

தில் சொன்ன பெயர். மற்றபெயர்கள் எல்லாம் பாம்பின் பரியாயப் பெயர்கள். மலை பாம்பின் பேரால் அழைக்கப்பெறுவதற்கு ஒரு புராண கதையுண்டு.

திருச்செங்கோட்டு மலை சுமார் 2000 அடி உயரம் உள்ளது. உயரிய சிகரம் சிவ லிங்கத் திருவுருவம் போலவும், மலையின் கிடக்கை பாம்பு படம் எடுத்துக் கிடப்பது போலவும் தோற்றமளிக்கின்றன. மலைமேல் ஏறிச் செல்வதற்குச் சுமார் 1200 படிக்கட்டுகள் உள்ளன. அப்படிப் போகும் வழியில் ஆதி சைவர் மண்டபம், திருமுடியார் மண்டபம் (காளத்தி சுவாமியார் மண்டபம்), தயிலி மண்டபம், சின்ன முதலியார் மண்டபம், சிங்கத்தூண் மண்டபம், அறுபதாம் படிமண்டபம், செட்டிக் கவுண்டன் மண்டபம், தேவரடியார் மண்டபம், இளைப்பாறு மண்டபம், கோபுரவாசல் மண்டபம் முதலியவைகள் இருக்கின்றன. ஓரிடத்தில் அகன்ற பாறையில் அறுபதடி நீளமுள்ள ஐந்தலைப் பாம்பு ஒன்று வெகு அழகாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. பாம்பின் படத்தின் நடுவில் ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம் காட்சியளிக்கிறது. அறுபதாம்படி மண்டபத்தின் அருகிலுள்ள படிகளைச் சத்தியப்படிகள் என்று வழங்குகின்றனர். மக்களுள் பொருள் கொடுக்கல் வாங்கலில் வழக்கு ஏற்பட்டால் இரு கட்சியினரும் இப் படிகளிலிருந்து சத்தியம் செய்து முடிவு செய்து கொள்கின்றனர்.

மலைமீது சென்றதும் முதலில் ஐந்து நிலைகளையுடைய இராஜகோபுரம் இருக்கிறது. கோபுரத்தைக் கடந்து இருபது படிகள் கீழே இறங்கினால் முதலில் செங்கோட்டு வேலரின் திருக்கோயிலும், நிருத்த மண்டபமும் தென்படும். வேலவர் இளமுருகன் கோலத்தில் காட்சியளிக்கிறார். திருமுருகனின் திருமுகப் பொலிவு கண்டவர் மனதைக் காந்த சக்தி யெனக் கவரும் பேரெழிலுடையது. 'செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்று வருந்துகிறார் அருணகிரிநாதர். இளங் குமரனைக் கண்டு வணங்கும் பேறு பெற்றவரே இவ் வுண்மையை உணர முடியும்.

செங்கோட்டு வேலரின் சந்நிதிக்குப் பக்கவில் அர்த்தநாரீசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. பாதி பெண்ணும் பாதி ஆணுமாகச் சேர்ந்துள்ள திருவுருவம் வெண்ணிறமாகக் காட்சியளிக்கிறது. இது கற்சிலையுமன்று; செம்பு, வெண்கலம், பித்தளை முதலிய உலோகங்களால் செய்யப்பட்டதுமன்று. யோகம் வல்ல சித்தர்களால் ஆக்கப்பட்டதோர் அமைப்பு என அறிஞர் கருதுகின்றனர். அர்த்தநாரீசுவரர் திருவடியில் நீர் ஊற்று ஒன்று இருக்கிறது; அருகில் ஒரு பேழையில் மரகதலிங்கம் இருக்கிறது. பக்கத்திலுள்ள மண்டபத்தின் கற்சுவரில் ஒன்பது துவாரங்கள் உள்ள சித்திரப் பலகணி ஒன்று இருக்கிறது. ஆண்டில் மூன்று நாட்கள் சூரியனின் கதிர்கள் இப் பலகணி வழியே சென்று அர்த்தநாரீசுவரரின் திருவடிகளில் படுகின்றன.

அர்த்தநாரீசுவரரின் முன்புள்ள நிருத்த மண்டபத்தைச் சபாமண்டபம் என்றும் சொல்வர். இதில் அழகிய சிற்பங்கள் அமைந்துள்ளன. நான்கு இயற்கையான இரும்புச் சங்கிலியைப் போல் கற்சங்கலிகள் தொங்குகின்றன. இவற்றைச் செய்த சிற்பி, பிச்சையண்ண ஆச்சாரி என்கின்றனர். இம் மண்டபத்திற்கு மேற்கே தாண்டவ பத்திரை விலாச மண்டபம் உள்ளது. இதில் நடராஜர் தாண்டவம், காளியின் நடனம் இவைகளைச் சித்தரிக்கும் திருவுருவக் காட்சிகள் காணத்தக்கன.

மலைமேல், இன்னும் விசாலாட்சி விசுவநாதர் கோயில், ஆதிகேசவப் பெருமாள் கோயில், நாகேசுவரர் கோயில், உச்சிப்பாறையில் பாண்டீசர் கோயில் முதலியவைகளும் இருக்கிறன. கணபதி தீர்த்தம், பாவநாசத் தீர்த்தம், சிவதீர்த்தம், பயிரவ தீர்த்தம், தேவ தீர்த்தம், சத்தி தீர்த்தம், நாகதீர்த்தம், சண்முக தீர்த்தம், சூரிய புஷ்கரணி, சந்திர புஷ்கரணி முதலியவை மலைமிசை இருக்கின்றன. இலுப்பை மரம் இத்தல விருட்சம். இங்கு நடைபெறும் விழாக்கள் மலையடிவாரத்தில் நகர் நடுவேயுள்ள கைலாச நாதர் ஆலயத்திலிருந்தே நடைபெறுகின்றன. அர்த்தநாரீசுவரர் வைகாசியில் திருத்தேர் விழாவிற்கு மாத்திரம் எழுந்தருளுவர்.

இத் தலத்தின் மகிமையை விளக்க சில நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. பிருங்கி முனிவர் சிவபெருமானைத் தவிர வேறு எவரையும் வணங்காதவர்; வண்டுருக் கொண்டு

இறைவனுள்ள பாகத்தையும் மாத்திரம் வழிபட, இறைவியின் சினத்துக்காளாகி தம் தசைகள் குன்றி வாடினர். இறைவன் முனிவருக்கு மற்றொரு காலை அருள, முக்காலுடன் இறைவியோடு கூடிய இறைவனைப் பணிந்து பேறு பெற்றனர்.

திருச்செங்கோட்டிற்குத் திருவாவடுதுறையிலிருந்து சிவப்பிரகாசர் என்பவர் வழிபாட்டிற்கு வந்தார். பல அற்புதங்கள் நிகழ்த்திய இவரை மக்கள் கல் இடபத்தைக் கடலையுண்ணச் செய்ய வேண்டும் என்றனர். அவரும்,

"வில்லார் பொதுச்சபையில்
வித்தகா நீயும் முனம்
கல்லானைக்கு இக்கருத்திக்
காட்டியஉன் - வல்லாண்மை
கட்டுரையாயின் இந்தக்
கல்லேறுஎழீ இக்கடலை
இட்ட இவர்முன் தின்னச்
செய்யே"

என்று பாடியவுடன் கல் இடபம் எழுந்து கடலையைத் தின்றது.

செங்கோட்டு வேலனிடம் பேரன்புபூண்ட குணசீலர் என்பார் ஒருவர் புலவர் இருந்தார். பாண்டி நாட்டிலிருந்து ஒரு புலவர் இவருடன் வாது செய்யும் எண்ணத்துடன் புறப்பட்டு வந்தார். பாம்பு வடிவமான நாகசாலத்தை நோக்கி,

'சமர முகத்திருச் செங்கோடு
சர்ப்ப சயிலமென
வமரிற் படம்விரித்
தாடாத தென்னை?

என்று பாடி, மேல் இரண்டடிப் பாடவராமல் வாக்குத் தடைப்பட்டது; மயக்கம் ஏற்பட்டது. வேலவன் ஒரு மாடு மேய்க்கும் சிறுவன்போல் சென்று,

—அஃதாய்ந்திலையே
நமரின் குறவள்ளி பங்கன்
எழுகரை நாட்டுயர்ந்த
குமரன் திருமுரு கன்மயில்
வாகனம் கொத்துமென்றே"

என்று பாடலைப் பூர்த்தி செய்தனன். பாண்டிப் புலவர் பையனை யார் என்று கேட்க, தான் குணசீலரின் கடை மாணவன் என்று பதில் சொன்னான் குமர ஆயன். கடைமாணவனே இவ்வளவு வல்லவனாயின் குணசீலரான இவன் ஆசிரியர் எத்தன்மையராக இருப்பாரோ என்று மனம் நடுங்கி வந்த வழியே திரும்பி விரைந்தார் பாண்டிய நாட்டுக் கவிஞர்.

திருஞான சம்பந்தர் அடியார் குழாத்துடன் இறைவழிபாட்டிற்காக இத்தலத்தில் வந்து தங்கினார். நளிர்ச்சுரம் எங்கும் பரவியிருந்தது. அடியார்களும் அந்த நோயால் அல்லற் பட்டனர். காழிவேந்தர் "அவ்வினைக் கிவ்வினை" என்று தொடங்கும் திருநீலகண்டப் பதிகம் பாடியருள, குளிர்நோய் அடியார்களை வருத்தாமற் போனதுடன் அந் நாட்டைவிட்டே அகன்றோடியது.

சம்பந்தர் பாடிய பதிகத்தில், 'பந்தணவும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தருளி', 'மலைமகள் கூறுடையான்', 'ஏலமலர்க்குழலாள் ஒரு பாகம் அமர்ந்து', 'மடவாள் திகழ் மார்பில்', 'பணைத்தோளியோர் பாகமாக' என்றெல்லாம் அர்த்தநாரீசுவரமூர்த்த உண்மையைப் புலப்படுத்தி யிருக்கின்றார். இதையே 'மாதிருக்கும் பாதியன்', 'மங்கைபங்கன்', 'குவளைக்கண்ணி கூறன்', 'உமைபாகன்' என்று சொல்லப்படுகிறது.

தேவாரப் பதிகத்தை யன்றி இத்தலத்தைப்பற்றி யெழுந்த பல நூல்கள் உள்ளன. அருணகிரிநாதர் கந்தர் அலங்காரத்தில் 8 பாடல்களிலும், கந்தரந்தாதியில் 11 பாடல்களிலும், கந்தர் அநுபூதியில் ஒரு பாடலிலும் திருவகுப்பில் 2 செய்யுட்களிலும், திருச்செங்கோடு, உரகசிகரி, உரகவெற்பு, கட்செவி வெற்பு, காளக்கிரி, சர்ப்பகிரி, சர்ப்பகோத்ரம், செங்குவடு, நாககிரி, நாகமலை, பணிமலை என்ற பெயர்களுடன் 27 திருப்புகழ்ப் பாடல்களையும் அருளியுள்ளார். 'வழிக்குத்துணை வடிவேலுஞ் செங்கோடன் மயூரமுமே' என்றும், 'செங்கோட்டு வெற்பனைச் சார்துணைப் போது மறவாதவர்க்கொரு தாழ்வில்லையே' என்றும், 'செங்கோடனை வாழ்த்துகை சால நன்றே' என்றும், 'செங்கோடைக் குமரனென எங்கே நினைப்பினும் அங்கே யென் முன் வந் ததிர் நிற்பனே' என்றும் அவர் புகழ்ந்து

கூறுவன மிகவும் இன்பம் பயப்பவை. இன்னும் திருச்செங்கோட்டுத் தலபுராணம், மான்மியம், திருப்பணி மாலை, திருமுக விலாசம், பணிமலை காவலர் அபிடேக மாலை, அர்த்த நாரீச்சுரமாலை, சதகம், கலம்பகம், பிள்ளைத் தமிழ், கருணாகரமாலை, குமாரர் பிள்ளைத் தமிழ், சண்முகர் சதகம், சந்திரசேகரமாலை, ஊசல், பள்ளு, குறவஞ்சி, மும்மணிக்கோவை, இரட்டைமணிமாலை, பதிகம், ஒருபா ஒருபஃது குமாரர் காதல், அந்தாதி, உலா, நாககிரி மகாத்மியம், அர்த்தநாரீசுவரர் மகாத்மியம், திருச்செங்கோட்டுத்தலமகிமை முதலிய நூல்களெல்லாம் இத்தலத்தைப் பற்றியனவே.

மலைமீதுள்ள அர்த்தநாரீசுவரர், செங்கோட்டு வேலவர் கோயில்களிலும், கீழேயுள்ள கைலாசநாதர் கோயிலிலும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவை ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், சோழன் பரகேசரிவர்மன், இராஜகேசரி வர்மன், முதலாம் பராந்தகன், முதலாம் இராஜேந்திர சோழன், விஜயநகர கிருஷ்ணதேவ ராயர், வீரவிசுவநாத திருமலைநாயக்கர், சொக்கநாத நாயக்கர், பல குறுநில மன்னர்கள் இவர்கள் காலத்தவை. அந்தணர்க்கு உணவளிக்க, நந்தாவிளக்கு எரிக்க, மேளம் கொட்டுவோர்க்கு நெல் அளிக்க, பொன், நிலம், கிராமங்கள் வழங்கியதைக் குறிக்கின்றன. கொங்கின் வீரசோழ மண்டலத்துக் கீழ்க்கரைப்பூந்துறை நாட்டுத் திருச்செங்கோடு என்று கூறப்பட்டிருக்கிறது. திருச்செங்கோட்டு ஆள்வார், திருச்செங்கோட்டுத் தேவர், சுப்பிரமணியப்பிள்ளையார், அர்த்த நாரீச்சுரர் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. கோபுரங்கள், மண்டபங்கள், இவைகளைக் கட்டினதைப் பற்றியும் கூறுகின்றன. விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் கல்வெட்டு ஒன்றில், ஸ்ரீ அர்த்தநாரீச்சுரமுடைய தம்பிரானருக்கு உத்திராட நட்சத்திரத்தில் கொடியேற்று விழாவும், ரேவதி நட்சத்திரத்தில் தெப்பத் திருநாளும் நடத்தச் சந்தையிலுண்டான சுங்கம், தரகு, மகிமை முதலியவைகளைத் தாரைவார்த்துக் கொடுத்த செய்தி காணப்படுகிறது. நிலதானங்கள் வழங்கியதைப் பற்றிக் கூறும் செப்பேடுகளும் உள்ளன.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ
னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண்
டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே

—அருணகிரிநாதர்.

ஸ்ரீ மதனகோபால சுவாமி கோவில் திருப்பணி

மதுரை மேலமாசி வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ மதனகோபால சுவாமி கோவிலில் ஆண்டாள் மண்டபம் நிர்மாணிக்க, மதுரை தெற்குமாசி வீதி, திரு. ஒ. கே. நன்னய்யர், திரு. ஒ. கே. இராசகோபாலய்யர், திரு ஓபுளா சச்சிதானந்த மூர்த்தி, ஸெடியார் குடும்பத்தார் அனைவரும் பங்கெடுத்துக் கொண்டார்கள். மேற்படி திருப்பணியை தங்கள் சொந்தச் செலவிலேயே செய்ய முன்வந்த திரு ஓபுளா சச்சிதானந்த மூர்த்தியார் குடும்பத்தாருடன் பக்த கோடிகள் அனைவரும் பங்கு கொண்டு சிறப்புற நடத்தித்தர வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

வார வழிபாடு

இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் ஸ்ரீ சிதம்பரேச்சுவர சுவாமி கோயிலில் "வார வழிபாடு" துவக்க விழா 14—12—'53 மாலை 7 மணிக்கு நடைபெற்றது. மதுரை திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமை தாங்கி அருளுரை வழங்கினார்கள். தமிழாசிரியர் வித்துவான் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் "உலகம் உய்ய உதித்தவன்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். பிரதி திங்கட்கிழமைதோறும் இரவு 7 மணி முதல் 9 மணி வரை வாரவழிபாடும், சமய பாட வகுப்பும் நடைபெற்று வருகிறது.

சேரமான் பெருமாள் நாயனார்

மன்னர்பிரா னெதிர்வண்ண
னுடலுவ ரூறியநீற்
றன்னபிரான் தமர்போல
வருதலும் தான்வணங்க
வென்னபிரானடி வண்ண
னெனவடிச் சேரனென்னுந்
தென்னர்பிரான் கழறித்
தறிவோனெனுஞ் சேரலனே.

—நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி

அறுபான்மும்மை நாயன்மார்களுள் முடியரசர் அறுவர்; அவர்களில் ஒருவர் சேரமான் பெருமாள் நாயனார். மலைநாட்டிலுள்ளது மகோதை என்னும் நகரம்; அதைத் திருவஞ்சைக்களம், திருவஞ்சிக்குளம், கொடுங்கோளூர் என்றும் அழைப்பர். இத் திருநகரின் சிறப்பை,

'மிக்கசெல் வம்மனைகள் தொறும்
விளையும் இன்பம் விளங்குவன
பக்கநெருங்கு சாலைதொறும் பயில்
சட்டறங்கள் பல்குவன
தக்கஅன்பர் மடங்கள் தொறும்
சைவ மெய்ம்மை சாற்றுவன
தொக்கவளங் கொள்இடங்கள் தொறும்
அடங்க நிதியம் துவன்றுவன'

என்று சேக்கிழார் புகழ்ந்து பாடுகிறார். இங்கிருந்து கொண்டு சேரநாட்டை யாண்டுவந்த சேர மன்னரின் திருமகவாய் அவதரித்தார் சேரமான் பெருமாள் நாயனார். 'அறங்கொள் சைவத் திறந்தழைப்ப...சேரர் குலமும் உலகுஞ் செய் பெருகு தவத்தால் அரனருளால் பிறந்தார் பெருமாக் கோதையார்' என்று பெரிய புராணம் கூறுகிறது. அரசாட்சியில் விருப்பின்றிச் சேரமான் பெருமாள் திருவஞ்சைக் களத்துக்கோயிலில் திருத்தொண்டுகள் புரிந்து கொண்டிருந்தார். அவருடைய தந்தையார் தவம் செய்யக் காட்டிற்கேகினார். அமைச்சர்கள் சேரர் பெருமானை வந்து முடிசூட்டிக் கொள்ளும்படி வேண்டினர். இறைவன் திருமுன் சென்று வணங்கி 'யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும்' பெற்று திருவருள் துணையால் அரசாளப் புறப்பட்டனர்; யானைமீதேறி நகர் வலம் வந்தனர். அப்போது வண்ணான் ஒருவன் உழமண் மூட்டையைத் தலையில் சுமந்து வருகையில் மழையால் நனைய அது உடலில் ஒழுகி நீருலர்ந்தபின் வெண்மை நிறமுள்ளவனாகக் காணப்பட்டான். திருநீறணிந்த அடியார் என எண்ணி யானையை விட்டிறங்கி அவன் அடிபணிந்தனர் சேரர்பெருந்தகை. அவன் 'அடியேன் அடிவண்ணான்' என்றான்; சேரர்பிரான் 'அடிச்சேரன் அடியேன்; திருநீற்றுச் சிவ வேடத்தை நினைப்பித்தீர் ஆதலின் வருந்தாமற் போகலாம்' என்று மொழிந்து அரண்மனைக் கேகினார். அரசாட்சி செய்வது இறைவன் திருவருளென இருந்து கூத்தப் பெருமானைப் பூசனை புரிந்து அவன் திருப் பாதச் சிலம்பொலி நாள்தோறும் கேட்கப் பெறும் பேறுபெற்றார்.

இவ்வாறு நிகழு நாட்களில் மதுரைச் சொக்கநாதர் தம் அன்பராகிய பாணபத்திரருக்குப் பெரு நிதியங் கொடுக்கத் திருவுளங் கொண்டார். பாடல் வல்ல பாணபத்திரனரிடம் கொடுத்து சேரமானுக்கு ஒரு திருமுகம் விடுத்தனர்.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண் பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

பாணபத்திரர் திருமுகத்தை எடுத்துக்

கொண்டு சென்று சேரர் கோவின் திருமுன் சமர்ப்பித்தார். சேரமானும் அது பெற்று ஆடிப்பாடித் தொழுது மகிழ்ந்தார்; கருவூலத் திலுள்ள பொருள் அனைத்தும் கொண்டுவரப் பணித்து அரசுடன் அவைகளை ஏற்றருள வேண்டுமெனப் பாணபத்திரனுரை வேண்டி னர். தனக்கு வேண்டியவற்றை மாத்திரம் பெற்றுக்கொண்டு பாணபத்திரனார் மது ரைக்கு மீண்டார்.

சேரமானாகிய கழறிற்றறிவார் செய்து வரும் பூசையில் ஒருநாள் கூத்தப்பெருமான் பாதச்சிலம்போசை வழக்கம்போல் கேட்கா திருப்ப, மன மயங்கி உடைவாளை உருவி மாய்த்துக் கொள்ளத் துணிந்தார். 'நம் முடைய அன்பன் நம்பி ஆரூரன் தில்லையில் வணங்கிப் பதிகம் ஓதுகின்றதைக் கேட்டமை யால் சிலம்போசை செய்யத் தாழ்த்தது' என்று வானின்றும் ஒரு ஒலி கேட்டது; சிலம்பொலியும் கேட்டது. சேரமான் பெரு மகிழ் வெய்தினார்.

அவருக்கு சுந்தரரைப் பார்க்க வேண்டு மென்ற அவா எழுந்தது. புறப்பட்டுச் சென்று சிதம்பரத்தை வணங்கினர். பொன் வண்ணத்தந்தாதி என்னும் நூலைப் பாடியருளி னர். பின் திருவாரூரை அடைந்தார். சுந்தரரும் சேரமானும் புற்றிடங் கொண்டாரை வணங்கி னார். பரவையார் திருமாளிகையில் சேரலர் கோன் தங்கியிருந்தார். திருவாரூர் மும்மணிக் கோவை என்ற நூலை இயற்றியருளினார். பின் னர் மதுரை முதலிய தலங்களை இருவருமாகச் சென்று வழிபட்டனர். திருப்பூவணம் என்ற பதிக்கு சுந்தரர் செல்லும்போது சேரர், சோழர், பாண்டியர் இம்மூன்று மன்னர்களும் உடன்சென்று வணங்கினர். சுந்தரரும் சேர மானும் திருவாரூருக்கு மீண்டனர். சேரர் கோமான்விருப்பத்திற் கிணங்க, ஆளுடைய நம்பிகள் அவருடன் மலைநாட்டிற்குச் சென் றார். திருவஞ்சைக்களத்தீசரை வணங்கிச் சிலநாள் அங்குத் தங்கியிருந்தனர். நம்பியாரூ ரருக்கு திருவாரூர் புற்றிடங் கொண்டாரைத் தரிசிக்க வேண்டுமென்ற பெருவிருப்பம் எழுந்தது. சேரமானிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டு திருவாரூர் சென்றனர். சேரமான் சுந்தரர்க்கு வேண்டிய பொருள் களை ஆள்கள் தலைமேல் ஏற்றி அனுப் பினர்.

சிலநாள் பின்னர் சுந்தரர் திருவாரூரி னின்றும் திருவஞ்சைக்களத்திற்கு சேரமா னைக் காணவேண்டுமென்ற விருப்பினால் புறப் பட்டு வந்தடைந்தார். சேரமான் வரவேற்று, அமுதளித்து, அரண்மனையில் சுந்தரர் தங்கி யிருக்கச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்தனர். இப்படி யிருக்குநாட்களில், சுந்தரரைத் திருக் கயிலாயத்திற்கு அழைத்துச் செல்ல தேவர் முதலியோர் வெள்ளையானையுடன் திருவஞ் சைக்களம் வந்தனர். திருக்கோயிலில் இருந்த படியே சேரமான் நினைவோடு சுந்தரர் வெள்ளை யானைமீதேறிக் கயிலாயம் சென்றார். இது தெரிந்த சேரமான் குதிரையின் காதில் சிவ மந்திரத்தை ஓதினர். அதன்மீது இவர்ந்து வான்வழியே திருக்கயிலாயத்தை அடைந் தார். இறைவன் திருமுன் செல்லாமல் நந்தி தேவர் தடை செய்தார். சேரமான் ஆதிஉலா என்ற நூலைப் பாடியருளினர். இறைவன் திருக்கோலக்காட்சி கிடைத்தது. சுந்தரர் பரமசிவத்தின் அணுக்கத் தொண்டராகும் பேறு பெற்றார். சேரமானுக்குக் கயிலாயத்தில் கணநாதராய் இருக்கும்படியான திருவருள் கிடைத்தது.

சுந்தரரும் சேரமானும் ஒருகாலத்து வாழ்ந்தவர்கள். இவர்கள் திருக்கயிலாயத் திற்குச் சென்றது கி.பி. 825-ஆம் ஆண்டுக்கு கொஞ்சம் முன்னே பின்னே இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருது கின்றனர். சுந்தரருடன் சேரமான் நட்புரிமை கொண்டிருந்தமையால் சுந்தரருக்கு 'சேர மான் தோழர்' என்ற பெயரும் ஏற்பட்டது. சேரர் பெருமான் செய்தருளிய நூல்கள் மூன்று. அவை பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கயிலாய ஞானஉலா. பொன்வண்ணத்தந்தாதி தில்லையில் பாடியது. 'பொன்வண்ணம்' என்ற சொல் லுடன் தொடங்குவதால் அப்பெயர் பெற்றது. ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வாக்குண் டாம் என்ற நூல்களின் பேரும் அவ்வாறே உண்டாயின. ஒரு பாடலில், அரிஅரன் தமக்குள் பேதமில்லாதவர் என்பதை விளக்கு கிறார். அது வருமாறு :

'இடமால் வலந்தா னிடப்பால்
துழாய்வலப் பாலொண்கொன்றை
வடமா லிடந்துகில் தோல்வலம்
ஆழியிடம் வலமான்

இடமால் கரிதால் வலஞ்சே
திவனுக் கெழில் நலஞ்சேர்
குடமா லிடம்வலங் கொக்கரை
யாம்எங்கள் கூத்தனுக்கே'

இப்பாடலில் சங்கரநாராயணர் வர்ணனை மிக அழகுபடக் கூறப்பட்டிருக்கிறது. 'மேருவை யடைந்த காகமும் பொன்னிறம்' என்ற பழமொழியைக் கடைசிப் பாடலில் 'கனகமலை யருகே போயின காக்கையும் அன்றே படைத்தது பொன்வண்ணமே' என்று அந்தாதியை எழில்நலம் பட முடிக்கின்ருர்.

திருவாரூர் மும்மணிக்கோவையைச் சேரர் கோமான் திருவாரூரில் தங்கியிருந்தபோது இயற்றியருளினர். முறையே அகவல், வெண்பா, கட்டளைக்கலித்துறைப் பாக்களை மும்மணிகளாக உடைய கோவை இந்நூல். கடைசிச் செய்யுளில்

'தாழ்ந்து கிடந்த சடைமுடிச்
சங்கரன் தாள்பணியா(து)
ஆழ்ந்து சிடந்துநை வார்கிளை
போலயர் வேற்கிரங்கிச்
சூழ்ந்துகிடந்த கரைமேல்
திரையெனுங் கையெறிந்து
விழ்ந்து கிடந்தல லறித்துயி
லாதிவ் விரிகடலே'

என்று கூறும் நயம் நோக்கி யின்புறற்பாலது.

இவர் அருளிய **திருக்கயிலாய ஞான உலா**வை **ஆதிஉலா** என்றும் கூறுவர். இவ்வுலாவில்,

'இல்லாரை எல்லாரும்
எள்குவர் செல்வரை
எல்லாரும் செய்வர்
சிறப்பென்னுஞ்—சொல்லாலே'
'கண்டுகேட் டுண்டுயிர்த்
துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே
யுளஎன்று—பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள்'

என்ற பகுதிகளில் திருக்குறட்பாக்களை அப்படியே அமைத்துப் பாடியிருக்கின்ருர். இன்னும், 'எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள் அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்' என்று அவர் கூறியிருப்பது உணர்ந்து இன்புறும் பான்மையது.

அறநிலைய ஆணையர் திருமயிலாடியில் நூல்நிலையம் திறந்துவைத்தல்.

மகா சிவராத்திரி

நம்முடைய நாட்டிலே மாதந்தோறும் ஆலயங்களில் ஏதாவது விழாக்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அப்படி நடைபெறும் விழாக்காலங்களில் மக்கள் விரதங்களை அனுட்டிப்பதும் வழக்கமாக இருந்துவருகிறது. திருமால், சிவபெருமான், முருகன், விநாயகர், தேவி இவர்களைக் குறித்து, மார்கழியில் வைகுண்ட ஏகாதசி, மாசியில் மகாசிவராத்திரி, ஐப்பசியில் கந்த சஷ்டி, ஆவணியில் விநாயக சதுர்த்தி, புரட்டாசியில் நவராத்திரி இவைகள் கொண்டாடப் பெறுகின்றன.

சிவராத்திரி என்பதில் சிவ என்பதற்கு துன்பத்தை அழிக்கிறது என்றும், இராத்திரி என்பதற்கு சுகத்தைக் கொடுக்கிறது என்றும் பொருள்படும். ஆதலின் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்தால் துன்பம் நீங்கி இன்பம் அடையலாம். சிவராத்திரியைப் பற்றி இரண்டு புராணவரலாறுகள் உண்டு. ஒருகாலத்தில் எல்லா உயிர்களும் அழிந்துவிடும்; அதைப் பிரளயம் என்பர்; உயிர்கள் எல்லாம் கடவுளிடம் ஒடுங்கிவிடும்; இறைவன் ஒருவனே இருப்பன். அக்கடவுளின் அம்சமான சக்தியே உமாதேவி; அருள்வடிவினள்; அன்பு மயமானவள்; உயிர்களுக்கு இரங்கி, சிவபெருமானை நோக்கித் தவம் கிடந்தாள். இறைவன் 'யாது வரம் வேண்டும்' என்று வினவ, 'எம்பெருமானே! அடியேன் இந்த இரவு முழுவதும் உம்மைப் பூசித்தேன்; ஆதலின் இது சிவராத்திரி எனப்படவேண்டும்; இந்நாளில் தங்களை வழிபடும் உயிர்கள் எல்லாம் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் அடைதல் வேண்டும்' என்று தேவியார் விண்ணப்பித்தார். இறைவனும் அப்படியேயாக என்று அருள்புரிந்தார். அழிந்த உயிர்கள் எல்லாம் தோன்றி உய்யும் வகையை நாடின. இது சிவராத்திரியைப் பற்றிய ஒரு வரலாறு.

ஒரு பிரளயத்தில் உலகமே மறைந்துவிட்டது; காத்தற் கடவுள் உலகத்தை உயர்த்தி நிறுத்தினர்; படைத்தற்கடவுள் உயிர்த்தொகுதிகளைப் படைத்தார். இவ்விருவருக்குள் யார் பெரியவர் என்ற வாதம் உண்டாயிற்று. சிவபெருமான் இவ்விருவர் முன் ஒரு பெருஞ்ஜோதியாய்த் தோன்றினர். இருவரும் ஜோதியின் அடிமுடி தேடிக் காண முடியவில்லை. இறைவன் தோன்றி, "உங்கள் முன் ஜோதியாய் நின்ற இந்த இரவே சிவ ராத்திரியாம்; இந்த மாசிமாதம் கிருஷ்ண பட்சம் சதுர்த்தசி திதியில் நம்மை வழிபடுவோருக்கு சகல நன்மைகளும் கிடைக்கும்; முன்பு பார்வதிதேவியாரும் தவம் கிடந்து வரம்பெற்ற நாளும் இதுவே" என்று திருவாய் மலர்ந்தருளினர். ஜோதிமலை தோன்றிய இரவே சிவராத்திரியாகும் என்பது மற்றொரு வரலாறு.

சிவராத்திரி ஐந்து வகைப்படும். அவை நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, மாக சிவ ராத்திரி அல்லது மகா சிவராத்திரி என்பன. ஓர் ஆண்டிலே பன்னிரண்டு மாதங்களிலும் வரும் கிருஷ்ணபட்சம் சுக்கில்பட்சம் இரு பத்தினுன்கில் உள்ள சதுர்த்தசிகள் நித்ய சிவராத்திரி. தை மாதம் கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் பதின்மூன்று நாட்கள் ஒருபொழுது உணவுகொண்டு பதினான்காம்நாள் சதுர்த்தசியில் சிவபெருமானை வழிபடுவது பட்ச சிவராத்திரி. மாசி கிருஷ்ண பட்ச சதுர்த்தசி, பங்குனி முதல் திருத்தியை, சித்திரை கிருஷ்ணபட்ச அஷ்டமி, வைகாசி முதல் அஷ்டமி, ஆனி சுக்கில பட்ச சதுர்த்தி, ஆடி கிருஷ்ணபட்ச பஞ்சமி, ஆவணி சுக்கில பட்ச அஷ்டமி, புரட்டாசி முதல் திரயோதசி, ஐப்பசி சுக்கில பட்ச துவாதசி, கார்த்திகை முதல் சப்தமி, பின்வரும் அஷ்டமி, மார்கழி இருபட்சங்களிலும் வரும் சதுர்த்தசிகள், தையிலே சுக்கில பட்சத் திருத்தியை இவை மாத சிவராத்திரிகள். மேலே கண்ட மாதங்களில் முறையே பிரமன், திருமால், உமாதேவி, சூரியன், உருத்திரன், குமரக் கடவுள்,

சந்திரன், ஆதிசேஷன், இந்திரன், சரசுவதி, மனோன்மணி, நந்தி இவர்கள் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்துப் பேறு பெற்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. திங்கட் கிழமையில் இரவுபகல் முழுவதும் அமாவாசை இருந்தால் அதை யோக சிவராத்திரி என்பர். ஒவ்வொருஆண்டிலும் மாசிகிருஷ்ண பட்சம் சதுர்த்தசியிலே வருவது மாக சிவராத்திரி அல்லது மகாசிவராத்திரி என்பது.

சிவராத்திரி விரதம் இருப்போர் சிவபூசை செய்யலாம் அல்லது சிவபூசை செய்வதைக் காணலாம். அதற்கு முன்னாள் ஒரு வேளை உணவு கொள்ளவேண்டும். சிவராத்திரியன்று காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஆலய வழிபாடு செய்தபின் சிவபூசை செய்தல் வேண்டும். கோயில், ஆற்றங்கரை, மலைச்சாரல், நந்தவனம், குருவின் வீடு, தனது இல்லம் இவைகள் பூசை செய்வதற்கு ஏற்ற இடங்கள். இரவு முதல் சாமத்தில் சிவலிங்கமூர்த்தியைப் பஞ்ச கவ்வியத்தினால் அபிஷேகம் செய்வித்து, சந்தனக் குழம்புடன் வில்வம் சாத்தி, தாமரை மலர்களால் அருச்சிக்க வேண்டும்; இரண்டாம் சாமத்தில் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து சந்தனத்துடன் தாமரை மலர் சாத்தி, துளசியால் அர்ச்சனை செய்ய வேண்டும்; மூன்றும் சாமத்தில் தேன் அபிஷேகம் செய்து, அரைத்த பச்சை கற்பூரத்துடன் முல்லை மலர்சாத்தி, முக்கிளை வில்வம்கொண்டு அருச்சிக்க வேண்டும்; நான்காம் சாமத்தில் கருப்பஞ்சாற்றால் அபிஷேகம் செய்து, அரைத்த குங்குமப் பூவுடன் நந்தியாவர்த்த மலர்சாத்தி, நீலோற்பலப் பூவினால் அருச்சிக்க வேண்டும். இந்த நான்கு சாமங்களிலும் நூபதீபாராதனைகள் முறையாகச் செய்ய வேண்டும். ஊண், உறக்கம் ஒழிக்க வேண்டும். விடிந்ததும் முழுகித் தூய்மை செய்து கொண்டு ஆலயவழிபாடு செய்த பின் ஆறு நாழிகைக்குள் பாரணை பண்ண வேண்டும். அன்று பகல் முழுவதும் தூங்காமல் சிவ கதைகள் கேட்டுக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்வாறு சிவபூசை செய்ய முடியாதவர்கள் சிவராத்திரியன்று ஊண், உணவு ஒழித்து, சிவகதைகள் கேட்டு, சிவாலய வழிபாடு செய்து, மறுநாள்காலையில் பாரணை செய்யலாம். சிவராத்திரி இரவு பதினான்கு நாழிகைக்குமேல் மூன்றே முக்கால் நாழிகை சிவதரிசனத்துக்கு மிகவும் உயர்ந்த காலமென்றும், அப்படிச் செய்வது மகா புண்ணியம் என்றும் கூறுவர்.

சிவராத்திரி விரதமிருந்து பேறு பெற்றோர் வரலாறுகள் நம் நாட்டில் பல வழங்குகின்றன. சிவராத்திரி விரதத்தால் உடல் தூய்மை, உள்ளத்தூய்மை, ஐம்புலன் ஐம்பொறி அடக்கம், ஆண்டவனிடம் ஒன்றிய பேரன்பு முதலிய நன்மைகள் ஏற்படுகின்றன. திருக்காளத்தி, திருக்கோகரணம், திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) முதலிய பாடல்பெற்ற பதிகளில் மகாசிவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அண்மையில் 7-3-1959-ல் மகா சிவராத்திரி வருகின்றது. அந்நன்னாளில் முறைப்படி விரதம் அனுட்டித்து ஆண்டவன் திருவருளுக்குப் பாத்திரமாவோமாக.

நிலக்குத்தகை அறிக்கை

வலிவலம் ஸ்ரீ ஹிருதய கமலநாதஸ்வாமி தேவஸ்தானம், நாகப்பட்டினம் தாலுகா, தஞ்சை ஜில்லா.

ஷை தேவஸ்தானத்துக்கு சொந்தமான நஞ்சை ஏக்கர் 308-59, புஞ்சை ஏக்கர் 31-97 ஐயும் 1369-ம் பசலி ஒன்றுக்கு மட்டில் ராஜீகம் தெய்வீகம் அன்னியில் குத்தகைக்கு 3-4-59 ந்தேதி வெள்ளிக்கிழமை பகல் ஒருமணிக்கு கோவில் வஸந்த மண்டபத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். கண்டிஷன்களும் இதர விபரங்களும் தேவஸ்தானம் ஆபீஸில் தெரிந்துகொள்ளலாம்.

வலிவலம்
23-2-59

S. தியாகராஜத் தேவர்.
அறங்காவலர்கள் குழுத்தலைவர்.

செங்கோட்டையில் திருவாவடுதுறை ஆதீன தேவாரப் பாடசாலைகளின் ஆண்டு விழாவும் திருமுறை மாநாடும்

திருநெல்வேலி, சிந்துபூந்துறை, விக்கிரம சிங்கபுரம், தென்காசி, மேலகரம் இலஞ்சி, செங்கோட்டை இவைகளிலுள்ள தேவாரப் பாடசாலைகளின் ஆண்டு நிறைவு விழாவும், திருமுறைமாநாடும் 25—1—59, 26—1—59 நாட்களில் செங்கோட்டை நக ராண்மைக் கழகம் முத்துசாமிக் கரையாளர் பூங்காவில் நடைபெற்றன.

முதல் நாள்: 25—1—59 மாலை 6 மணிக்கு தேவாரப் பாடசாலையிலிருந்து, தெய்வ வழிபாட்டுடன் 7 பாடசாலைகளின் மாணவ, மாணவிகள் திருமறைகள் ஓத, மேள வாத்தியங்களுடன், திருமறைகளை யானையின்மேல் வைத்து வீதி வலம் கொண்டுவரப்பட்டது. விழாவை, சென்னை அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், I. A. S., அவர்கள் துவக்கி வைத்தார்கள். மக்கள் நல்வாழ்வு வாழ, திருமுறைகளை நாள்தோறும் ஓத வேண்டுமென்றும், இளம் வயதிலேயே பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டு மென்றும், இம் மாநாடு சிறப்பாக நடைபெற வேண்டுமெனவும் கூறினார்கள். இலஞ்சி வள்ளல் திரு. I. A. சிதம்பரம் பிள்ளை, M.A., அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைமை உரையில் திருமூலரின் திருமந்திரத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். பின், அண்ணுமலை சர்வ கலாசாலை திரு. G. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L., அவர்கள் "தேவாரத்தின் பெருமை" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். திருவாவடுதுறை ஆதீன வித்துவான் திரு. வீரசுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரையும், வாழ்த்துரையும் வழங்க முதல் நாள் விழாச் சிறப்பாக முடிவுற்றது.

இரண்டாம் நாள்: 26—1—59 காலையில் விழாவிற்குத் தலைமை வகித்த திரு. அ. உத்தண்டராமன், I. A. S., அவர்கள் திருமுறைகளில் போட்டி வைத்துத் தேர்ந்தெடுக்கப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வெள்ளிக் குத்துவிளக்குகளும், வெண்கலக் கூசாக்களும் பரிசாக வழங்கினார்கள். சைவப் பெருமக்கள் ஒவ்வொருவரும் சைவ வேடத்தில் பற்றும், சைவ அடியார்களிடத்தில் அன்பும் உடையவர்களாக இருத்தல் வேண்டுமெனவும் எடுத்துக் கூறினார்கள். திருநெல்வேலி கணபதி மில்ஸ் அதிபர் சைவப் புரவலர் திரு. S. S. அருணு சலம் பிள்ளை அவர்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் வரலாற்றைப் பற்றி எடுத்துக் கூறி ஞர்கள்.

மாலையில் நகராண்மைக் கழகத் தலைவர் திரு. M. சுப்பிரமணியக் கரையாளர், M. L. C., அவர்கள் தலைமை வகித்தார்கள். ஆதீன சைவப் பிரசாரகி, திரு. சிவகாம சுந்தரி யம்மாள், "புனிதவதியார்" என்னும் பொருள் பற்றியும், திரு. A. R. கரையாளர் "சமய வாழ்வு" என்னும் பொருள் பற்றியும், அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆராய்ச்சி யாளர் திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் "திருநெறிய தமிழ்" என்னும் பொருள் பற்றி யும், நாகர் கோயில் திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் "பெரிய புராணத்தின் பேருண்மை" என்னும் பொருள் பற்றியும் பேசினார்கள். முடிவில் திருவாவடுதுறை ஆதீன சைவ சமயச் சொற்பொழிவாளர் திரு. ஆ. முத்துக்குமாரசாமிப் பிள்ளை நன்றி கூற விழாச் சிறப்புடன் முடிவுற்றது.

S. V. இராஜன் B.A., B.L.,

இவர் சில ஆண்டுகள் திருக்கோயில்களின் நிர்வாக அதிகாரியாகவும், பின் 1944 முதல் அறநிலையப் பாதுகாப்பு இலாகாவில் உதவி ஆணையாளராகவும் திருச்சி, நாகப்பட்டி னம், திருநெல்வேலி முதலிய இடங்களில் இருந்து பணியாற்றினர். 1956 முதல் துணை ஆணையாளராகப் பதவி யேற்று கோயம்புத்தூரில் இருந்தார். அதன் பின்னர் 1957 முதல் சென்னை ஆணையர் அலுவலகத்தில் துணை ஆணையராகப் பணியாற்றி வந்தார். உடல் நலக்குறை வேற்பட்டு 1—2—1959-ல் இறைவன் திருவடி நீழல் எய்தினர். அன்ன வரின் ஆத்மா சாந்தியடைவதாக!

சிவ விஷ்ணுத்தல அட்டவணை

சிவத்தலங்கள்

தொண்டை நாடு

சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்கள்.

	தலம். (1)	இறைவன், இறைவி. (2)	பாடல். (3)	ரயில் நிலயம். (4)	குறிப்பு. (5)
1	அச்சிறுபாக்கம் ...	பாக்கபுரேசுரர், சுந்தரநாயகி.	சம்பந்தர் ...	அச்சரபாக்கம் ...	சிவபெருமான் திரிபுர தகனம் செய்யும் பொருட்டு தேவர்கள் விநாயகரை நினையாமல் தேர்செய்ய அதனுடைய அச்சு முறிந்தது. கண்ணுவரும், கௌதமரும் பூசித்த தலம்.
2	திரு இடைச்சுரம்.	இடைச்சுர நாதர், இமைய மடக்கொடியம்மை.	சம்பந்தர். ...	செங்கற்பட்டு ...	சனற் குமார முனிவர் பூசித்த தலம்.
3	இலம்பையங்கோட்டூர்.	சந்திரசேகரேசுரர், கோடேந்துமுலையம்மை.	சம்பந்தர் ...	கடம்புத்தூர் ...	ரம்பை பூசித்த தலம். சுவாமி தீண்டாத் திருமேனி.
4	திரு ஒற்றியூர் ...	ஆதிபுரீசுரர், வடிவுடையம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	திருவொற்றியூர் ...	கலிய நாயனாருடைய தலம். சுந்திர மூர்த்தி, சங்கிலி நாச்சியாரை மணம் புரிந்த தலம். இதையொட்டி மகிழடி உத்சவம் மாசி மாதத்தில் நடக்கிறது. தேவி சந்நிதி விசேடம்.
5	திருஓணகாந்தன் தளி.	ஓணகாந்தேசுரர், காமாக்ஷியம்மை.	சுந்தரர் ...	காஞ்சிபுரம் ...	ஓணன், காந்தன் என்ற அசுரர்கள் பூசித்த தலம்.
6	கச்சி அநேக தங்காபதம்.	அநேகதங்காபதேசுரர், காமாக்ஷி.	சுந்தரர் ...	காஞ்சிபுரம் ...	கணபதியும் குபேரனும் பூசித்த தலம்.

	(1)	(2)	(3)	(4)	(5)
7	திருக்கச்சி ஏகம்பம்.	ஏகாம்பரநாதர், காமாக்ஷி.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	காஞ்சீபுரம் ...	பிருதிவி தலம். ஐயடிகள் காடவர்கோன் அரசாட்சி செய்த தலம். சுந்தரமூர்த்தி இடதுகண் பார்வையை இங்கு பெற்ருர். திருக்குறிப்புத் தொண்டரும், சாக்கிய நாயனுரும் முக்தியடைந்த முதுநகர். நிலாத்துண்டப் பெருமான் சந்நிதி உள்ளது.
8	கச்சிநெறிக்காரைக் காடு.	காரைத் திருநாதேசுரர், காமாக்ஷி.	சம்பந்தர் ...	காஞ்சீபுரம் ...	மேற்குப் பார்த்த சந்நிதி. இந்திரன் பூசித்த தலம்.
9	திருக்கச்சி மேற்றளி.	திருமேற்றளிநாதர், காமாக்ஷி.	அப்பர், சுந்தரர் ...	காஞ்சீபுரம் ...	இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன.
10	திருக்கச்சூர் (ஆலக் கோயில்).	விருந்திட்ட ஈச்வரர், அஞ்சனுக்ஷியம்மை.	சுந்தரர் ...	சிங்கப்பெருமாள் கோயில், ...	சுந்தரர் பசியால் வருந்தியபொழுது சுவாமி அன்னம் யாசித்து அருளிய தலம். விஷ்ணு கூர்மமாயிருந்து பூசித்த தலம்.
11	திருக்கழுக்குன்றம்.	வேதகிரீசுரர். பெண்ணி நல்லாளம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர், .	செங்கற்பட்டு ...	தினந்தோறும் உச்சிக்காலத்தில் இரண்டு கழுகுகள் வந்து சர்க்கரை அன்னத்தையும், நெய்யையும் புசிக்கின்றன. இங்குள்ள குளத்தில் 12 வருடத்திற்கு ஒரு தடவை சங்கு பிறப்பதாகச் சொல்லப் படுகிறது.
12	திருக்கள்ளில் ...	சிவானந்தேசுரர், ஆனந்த வல்லியம்மை.	சம்பந்தர் ...	பொன்னேரி ...	பிருகு முனிவர் பூசித்த தலம். கூற்றுவ நாயனுருடைய அவதார தலமான களத்தூர் என்கிற பொன் விளைந்த களத்தூர் 12 மைலில் இருக்கிறது.
13	திருப்பாசூர் ...	பாசூர்நாதர், பசுபதி நாயகி.	சம்பந்தர், அப்பர் ...	திருவள்ளூர் ...	சிவபெருமான் மூங்கிலடியில் தோன்றி யருளியதலம்.
14	மயிலாப்பூர் ...	கபாலீசுரர், கற்பகவல்லி.	சம்பந்தர் ...	மதராஸ் ...	பூம்பாவையை சம்பந்தர் பெண்ணுருவாக்கி யருளிய தலம். பார்வதி தேவியார் மயிலாய் பூசை செய்த தலம். வாயிலார் நாயனர் அவதார தலம்.

	(1)	(2)	(3)	(4)	(5)
15	மாகறல் ...	அகத்தீசுரர், திரிபுவனேஸ்வரி.	சம்பந்தர் ...	காஞ்சீபுரம் ...	தேவேந்திரன் பூசித்த தலம். இராஜேந்திர சோழனுக்கு சுவாமி பொன்னுடும்பாக தோன்றியருளிய தலம்.
16	திருமாற்பேறு ...	மணிகண்டேசுரர், அஞ்சனாட்சியம்மை.	சம்பந்தர், அப்பர் ...	திருமால்பூர் ...	திருமால் சிவனை பூசித்து தெரிசனம் பெற்ற தலம்.
17	வடதிருமுல்லைவாயில்.	மாசிலாமணீச்வரர், கொடியிடைநாயகி,	சுந்தரர் ...	அம்பத்தூர் ...	தொண்டைமான் சக்ரவர்த்தி அநுக்கிரகம் பெற்ற தலம். ஸ்வாமி தீண்டாத் திருமேனி. சுவாமி சந்நிதியில் எருக்கந் தூண்கள் இருக்கின்றன. ஒரு நந்தி திரும்பியிருக்கின்றது.
18	திருவலிதாயம் (பாடி) ...	வலிதாயநாதர், தாயம்மை.	சம்பந்தர் ...	அம்பத்தூர் ...	பரத்வாஜர், பிருகஸ்பதி, ஹனுமான் பூசித்த தலம்.
19	திருவான்மியூர் ...	மருந்தீசுரர், சொக்கநாயகி.	சம்பந்தர், அப்பர் ...	மதராஸ் ...	வான்மீக ருஷி பூசித்த தலம். பால் நிறமான ஸ்வயம்பு மூர்த்தி. மேற்குப் பார்த்த சந்நிதி. லிங்கத்தின்மேல் குளம்பின் வடிவு தெரிகிறது.
20	திருவிற்கோலம் (கூவம்) ...	திரிபுராந்தகர், திரிபுராந்தகியம்மை.	சம்பந்தர் ...	கடம்பத்தூர் ...	சுவாமி தீண்டாத் திருமேனி.
21	திருவெண்பாக்கம்.	ஊன்றீசுரர், மின்னலொளியம்மை.	சுந்தரர் ...	மதராஸ் ...	சுந்தரர் ஊன்றுகோல் பெற்ற ஸ்தலம். பூண்டி நீர்த்தேக்கத்தால் கோயில் மூழ்கிவிட்டது. புதுக்கோயில் நிறுவ ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.
22	திருவேற்காடு ...	வேதபுரீசுரர், வேற்கண்ணியம்மை.	சம்பந்தர் ...	ஆவடி ...	மூர்க்க நாயனர் அவதார தலம்.
23	திரு ஆலங்காடு ...	தேவர் சிங்கப்பெருமான், வண்டார் குழலி.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	திருவாலங்காடு ...	பஞ்சசபைகளில் இரத்தினசபை. காரைக்கால்மையார் முக்திபெற்ற தலம். இங்கிருந்து 12 மைல் தொலைவில் திருத்தணி இருக்கின்றது.

	(1)	(2)	(3)	(4)	(5)
			வட ஆற்காடு மாவட்டம்.		
24	திரு ஊறல் (தக்கோலம்) ...	உமாபதீஸ்வரர், உமையம்மை.	சம்பந்தர் ...	தக்கோலம் ...	......
25	குரங்கணின் முட்டம்.	வாலீசுரர், இறையார்வளையம்மை.	சம்பந்தர் ...	காஞ்சீபுரம் ...	குரங்கு, அணில், காகம் பூசை செய்து முக்திபெற்ற தலம். மேற்குப் பார்த்த சந்நிதி.
26	பனங்காட்டூர் (திருப்பனங்காடு) ...	பனங்காட்டீசுரர், அமிர்தவல்லியம்மை.	சுந்தரர் ...	காஞ்சீபுரம் ...	அகத்தியர், புலத்தியர் பூசித்த இரண்டு சந்நிதிகள் உண்டு.
27	திருவல்லம் ...	வல்லநாதர், வல்லாம்பிகை.	சம்பந்தர் ...	திருவலம் ...	நவக்ரகங்களும், வல்லானொன்னும் அரசனும் பூசித்த தலம். இத்தலத்திற்கு வடக்கில் 8 மைலில் வள்ளிமலை என் சுப்ரமண்ய தலம் இருக்கிறது.
28	திருவோத்தூர் ...	வேதநாதேசுரர், இளமுலைநாயகி.	சம்பந்தர் ...	காஞ்சீபுரம் ...	சம்பந்தர் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிய தலம். சிவபெருமான் வேதத்தின் பொருளை முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் அருளிய தலம். ஆதிகேசவப் பெருமாள் சந்நிதி இருக்கிறது.
			தென் ஆற்காடு மாவட்டம்.		
29	திருவக்கரை ...	சந்திரசேகரர், வடிவாம்பிகை.	சம்பந்தர் ...	மயிலம் ...	சுவாமி மும்முகத்துடன் விளங்குகிறார். பிரகாரத்தில் விஷ்ணு ஆலயம் இருக்கிறது. இங்குள்ள காளி விசேடம்.
30	திருஅரசிலி (ஒழிந்தியாபட்டு) ...	அரசிலிநாதர், பெரியநாயகி.	சம்பந்தர் ...	புதுச்சேரி ...	வாமதேவ முனிவர் பூசித்த தலம்.
31	திருஇரும்பை மாகாளம்.	மாகாளேசுரர், குயில்மொழியம்மை.	சம்பந்தர் ...	புதுச்சேரி ...	மாகாளர் பூசித்த தலம். கார்த்திகை சோமவார உற்சவம் நடக்கிறது.

வைணவத் தலங்கள்

	ஊரின் பெயர்.	பிரயாண வசதி.	பெருமாள் தாயார், திருநாமம்.	மங்களா சாஸனம் செய்த ஆழ்வார்கள்.	குறிப்பு.
	(1)	(2)	(3)	(4)	(5)
			தொண்டை நாடு		
			சென்னை மாவட்டம்,		
1	திருவல்லிக்கேணி ப்ருந்தாரண்ய க்ஷேத்ரம் என்பர் வடமொழியில்.	சென்னை ...	வேங்கட கிருஷ்ணன், பார்த்தஸாரதி, ருக்மிணிப்பிராட்டி, என்னையாளுடையப்பன் (மந்நாதன் என்பர் வடமொழியில்), வேதவல்லித் தாயார், தெள்ளிய சங்கர், சக்ரவர்த்தித் திருமகன், தேவப்பெருமாள்.	பேயாழ்வார், திருமழிசையாழ்வார். திருமங்கையாழ்வார்.	......
			செங்கல்பட்டு மாவட்டம்		
2	அட்டபுயகரம் (அட்டபுயஸ்கம் என்றும் வழங்கப் பெறும்).	செங்கல்பட்டு - அரக்கோணம் லைன், காஞ்சிபுரம் ஸ்டேஷன்.	ஆதிகேசவப்பெருமாள், அலர்மேல்மங்கைத் தாயார்.	பேயாழ்வார், திருமங்கையாழ்வார்.	இவ்வெம்பெருமானுக்கு எட்டுத் திருக்கரங்கள் உள்ளன.
3	அத்தியூர் (காஞ்சிபுரம் பெருமாள் கோயில் என்றும் வழங்குதல் உண்டு.)	ஷை.	வரதராஜப்பெருமாள் (தேவப்பெருமாள் என்றும், தேவராஜன் என்றும் பேரருளாளன் என்றும் திருநாமங்கள் உண்டு.) பெருந்தேவித் தாயார்.	பூதத்தாழ்வார் ...	இங்குள்ள மலையடிவாரத்திலுள்ள அழகிய சிங்கப்பெருமாளே மங்களசாஸனம் செய்யப் பெற்றவர் என்பாருமுண்டு. முக்திதரும் நகர் ஏழில் இத்திருப்பதி முக்கியமானது.
4	ஊரகம் "உலகளந்த பெருமாள் கோயில்" எனவும் வழங்கும்.	ஷை	உலகளந்த பெருமாள், அமுதவல்லித்தாயார்.	திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார்.	இச்சந்நதியிலேயே நீரகம், காரகம், கார்வானம் திருப்பதிகளும் அடங்கியுள்ளன.

	(1)	(2)	(3)	(4)	(5)
5	கள்வனூர் ...	காஞ்சீபுரம் ஸ்டேஷன்.	ஆதிவராகப் பெருமாள், அஞ்சிலை நாச்சியார்.	திருமங்கையாழ்வார்.	இது காமாக்ஷியம்மன் கோயிலில் இருக்கிறது. தாயார் இப்பொழுது காணப்படவில்லை.
6	காரகம் ...	ஷை	கருணாகரப் பெருமாள், பத்மாமணித் தாயார்.	,,	ஊரகம் சந்நிதிக்குள் இது உள்ளது.
7	கார்வானம் ...	ஷை	கள்வன், கமலவல்லித் தாயார்.	,,	ஊரகம் சந்நிதிக்குள் இது உள்ளது.
8	திருக்கடன்மல்லை. மாமல்லைபுரம் எனவும் கூறப்படும். அது இன்று மஹாபலிபுரம் என வழங்கப்படுகிறது.	செங்கல்பட்டி விருந்து பஸ் வசதி உண்டு.	தலசயநப் பெருமாள், நிலமங்கைத்தாயார்.	பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார்.	பூதத்தாழ்வார் அவதாரஸ்தலம். இது பல்லவர்களின் கலைத்திறனை இன்றும் உலகிற்கெடுத்துக் காட்டும் சிற்பங்கள் இங்கு கண்டுகளிக்கத்தக்கன.
9	திருத்தண்கா ...	காஞ்சீபுரம் ஸ்டேஷன்.	விளக்கொளிப் பெருமாள், தீபப் பிரகாசர் (வடமொழி), மரகதவல்லித் தாயார்.	திருமங்கையாழ்வார்.	வேதாந்த தேசிகர் அவதார ஸ்தலம்.
10	திருநின்றவூர் தின்னனூர் என வழங்கும்.	சென்னை -அரக்கோணம் லைன், தின்னனூர் ஸ்டேஷன்.	பக்தவத்ஸலப் பெருமாள், என்னைப்பெற்ற தாயார்.	,,	......
11	திருநீர்மலை வடமொழியில் "தோயாசலம்."	சென்னை-செங்கல்பட்டு லைன், பல்லாவரம் ஸ்டேஷன்.	நீர்வண்ணப் பெருமாள். அணிமாமலர் மங்கை, மலைமேல் ஸ்ரீரெங்கநாதன், ஸ்ரீரெங்கநாயகி, சக்கரவர்த்தித் திருமகன், நரசிம்மன், உலகளந்த பெருமாள் சந்நிதிகளுமுண்டு.	பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார்.	நீர்வண்ணன், அணிமாமலர் மங்கை என்னும் திருநாமங்கள், ஆழ்வார் குறித்தவை.

	(1)	(2)	(3)	(4)	(5)
12	திருப்புட்குழி ...	காஞ்சீபுரம் ...	விஜயராகவன், மரகத வல்லி.	திருமங்கையாழ்வார்.	"போரேறு" எனப் பெயரிட்டனர் ஆழ்வார் இவ்வெம்பெருமானுக்கு. அதனை வடமொழியில் "ஸமரபுங்கவர்" என மொழி பெயர்த்தார் வேதாந்த தேசிகனர்.
13	திருவிடவெந்தை (திருவிடந்தை).	சென்னை - செங்கல்பட்டு லைன், வண்டலூர் ஸ்டேஷன்.	நித்தியகல்யாணப் பெருமாள், கோமளவல்லி தாயார்.	திருமங்கையாழ்வார்.	......
14	திருவெவ்வுளூர் "கிம் கிருஹ க்ஷேத்ரம்" "வீக்ஷாரண்ய க்ஷேத்ரம்" என்பன வடமொழிப் பெயர்கள். "திருவள்ளூர்" என்று வழங்குகிறது.	சென்னை - அரக்கோணம் லைன், திருவள்ளூர் ஸ்டேஷன்.	வீரராகவப் பெருமாள், கனகவல்லித்தாயார்.	திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார்.	அமாவாசை தோறும் இவ்வூர் குளத்தில் நீராட மக்கள் குழுமுகின்றனர்.
15	தற்கால வழக்கு நிலாத் திங்கள் துண்டம்.	காஞ்சீபுரம் ஸ்டேஷன்.	நிலாத்திங்கள் துண்டத்தான், நேரொருவரில்லா வல்லித் தாயார்.	திருமங்கையாழ்வார்.	இது ஏகாம்பரேசுவரர் கோயிலின்கண் உள்ளது.
16	நீரகம் ...	,,	ஜகதீசன், நிலமங்கை வல்லி.	,,	இது ஊரகத்திலேயே உள்ளது.
17	பரமேச்சுர விண்ணகரம். "வைகுண்டப்பெருமாள் சன்னிதி" என்பர்.	,,	பரமபத நாதன், வைகுந்த வல்லி.	,,	விமானத்தில் இரண்டு தளங்கள் உள்ளன. சேவிக்கத் தக்கது.
18	பவளவண்ணம் ...	,,	பவளவண்ணன், பவளவல்லித் தாயார்.	,,	இதன் அருகே பச்சைவண்ணர் கோயில் ஒன்று உள்ளது.

	(1)	(2)	(3)	(4)	(5)
19	பாடகம் (பாண்டவ தூதர் கோயில்).	காஞ்சீபுரம் ஸ்டேஷன்.	பாண்டவதூதன், ருக்மணி சத்தியபாமா	பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார்.	......
20	வேளுக்கை ...	,,	அழகியசிங்கர், முகுந்த நாயகன், வேளுககை வல்லி.	பேயாழ்வார் ...	......
21	வெஃகா ...	காஞ்சீபுரம் ...	சொன்னவண்ணம் செய்த பெருமாள். (யதோக்த காரி) கோமளவல்லித் தாயார்.	பொய்கையாழ்வார் பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார்.	பொய்கையாழ்வார் அவதார ஸ்தலம். செந்நாப் புலவர் திருமழிசையாழ்வார் பின்சென்று சொன்னவண்ணம் செய்தவனென்னப் பேர்பெற்றுன் இப் பச்சைப் பசுங்கொண்டல்.

வட ஆற்காடு மாவட்டம்

	(1)	(2)	(3)	(4)	(5)
22	கடிகை (சோளசிங்கபுரம்) ஷோளிங்கர்.	அரக்கோணத்திலிருந்து பஸ் வசதி உண்டு.	அக்காரக்கனி (மலைமேல் மூலவர்) தக்கான் (ஊரில் உத்ஸவர்).	பேயாழ்வார், திருமங்கையாழ்வார்.	சங்க சக்ரங்களுடன் சதுர்புஜராக ஆஞ்சநேயர் இங்கு சேவை தந்தருளுகிருர். எம்பெருமான் திருநாமங்கள் திருமங்கையாழ்வார் குறித்தவை.

வட நாடு

	(1)	(2)	(3)	(4)	(5)
1	திருவேங்கடம் (திருமலை) சேஷாத்ரி, வேங்கடாத்ரி என்பன வடமொழிப் பெயர்கள்.	காட்பாடி-கூடூர் லைன், திருப்பதி கிழக்கு ஸ்டேஷன்.	திருவேங்கடமுடையான், ஸ்ரீநிவாஸன், அலர்மேல் மங்கைத்தாயார்.	மதுரகவியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வாரைத் தவிர மற்றனைவரும் மங்களா சாஸனம் செய்துள்ளனர்.	இது ப்ரபல ப்ரார்த்தனை ஸ்தலம்.
2	சிங்கவேள் குன்றம் அஹோபிலம்.	பஜவாடா - மசூலிப்பட்டணம் லைன், நந்தியால் ஸ்டேஷன்.	நரசிம்மன், லக்ஷ்மி ...	திருமங்கையாழ்வார்.	"தெய்வமல்லாற் செல்ல வொண்ணு"தவெதன்பர் இதனைத் திருமங்கை மன்னன்.